Registered as a News Paper

பக்கம் – 12+II

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 13 | 29-11-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 284

உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்
முத்துமாரி நகைமாடம்
78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது
யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.
(சி-7411)



# மாவீரர் நாள் 2002





" மாவீரர்களே உங்களது இரத்தத்தாலும் வியர்வையாலும் உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம் இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது"

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 29.11.2002



அமைதி வழியில், மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகின்றோம். காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய எமது போராட்ட வழி முறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. தமிழீழத் தேசியத் தலைவர்

## உன்னதங்களை எட்டும் நேரமிது...

இன்று உலக நாடுகளின் கவன ஈர்ப்புமையமாக வன்னிப் பெருநிலப்பரப்பு மாறிவருகின்றது.

யாழ் -கண்டிவீதி திறக்கப்பட்டது முதல்- அதுவரை காலமும் வெறும் போர் சூழ்ந்த பூமியாக மட்டும் அனைவர் மனதிலும் ஒரு கருத்துருவைக் கொண்டிருந்த வன்னியின் களதள நிலைமைகளை நேரில்பார்க்கும் முனைப்பு உந்த வரலாறு படைத்து நிற்கும் அந்த மண்ணை காணவருவோரின் மனப்பதிவுகளில் அந்த மண்ணினதும், அதில் வாழும் மக்களினது வளமும், ஆற்றலும், பிரமிப்பை ஏற்படுத்தியதும் உண்மைதான்.

உலகின் மிகப் பெரும் 'பயங்கரவாதிகள் உறையும் பயங்கரமான காடுதான் வன்னி' என சிங்கள அரசுகள் கடந்த சில தசாப்தங்களாக பல மில்லியன் டொலர்களை செலவழித்து உலகெங்கும் அலைந்தலைந்து பிரசாரம் செய்து ஏற்படுத்திய மாயை மனங்களில் ஏற்படுத்திவைத்த விசுவரூப தோற்றம் அந்த மண்ணின் நுழை வாயிலில் காலடிவைக்கும் கணத்திலேயே நொருங்கிச் சிதைந்து, தாம் எவ்வாறெல்லாம் சிறிலங்கா அரசால் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தென்பகுதி மக்களும் சர்வதேச சமூகமும் புரிந்து கொண்ட வரலாற்றுத் திருப்பமும் வன்னிப் பெருநிலப்பரப்பின் வளமான விலாசத்தை உலகத்திற்கு தெரியப்படுத்தியது.

அத்துலத்முதலி தொடங்கி, ரஞ்சன் விஜேரத்னா போன்றோரால் தொடர்ந்து கதிர்காமரால் தீவிரமாக்கப்பட்ட பயங்கரவாதப் பிரசாரம்- வருடக்கணக்கிலான அதன் வளர்ச்சியை நாட்கணக்கில் தொலைத்துவிட்டு விழிபிதுங்கி, தலை குனிந்து நிற்பதை பேரினவாதிகளால் சகித்துக்கொள்ள முடியாது என்பது கூறித்தெரியவேண்டிய செய்தியல்ல.

தாய்லாந்தில் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் முதல், இந்த வார 'ஒஸ்லோ' சந்திப்பு வரை உலகம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கும், அதனை தமது தோளில் ஏற்றி சுமந்து போராடி, போராடி உலக சமூகத்திற்கு புரியவைத்துள்ள விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ள கௌரவமிக்க அங்கீகாரம் சரித்திர முக்கியத்துவமிக்க ஒன்றாகும்.

வன்னி மண்ணின் பயங்கரக்காடுகளும், அங்கு உறைந்துள்ள, சிங்கள அரசுகளின் பேரினவாத பார்வைக்கு பயங்கரவாதிகளாகத்தெரியும் மக்களும், போராளிகளும் உலக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்பட்டு, சமநிலைப்படுத்தப்பட்டுவரும் நிகழ்வுகள் மதவாத-இனவாத மாறாநோயால் மனப்பாரிசவாதம் ஏற்பட்டுள்ள தென்பகுதி அரச பயங்கரவாத செயற்பாட்டாளர்களுக்கு கடும் வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தி வருகிறது என்பதும் தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வேயாகும்.

இன்று நாள்தோறும் வன்னிவரும் ராஜதந்திரிகள், சர்வதேச அரசியல் அவதானிகள், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரும்- சிங்கள அரசுகளின் கடந்த கால பிரச்சார கோளாறுகளை நம்பி தமிழ்மக்கள் குறித்தும் அவர்களின் விடுதலைப் போராட்டம் குறித்தும், விடுதலைப் புலிகள் குறித்தும் மனதில் கொண்டிருந்த தவறான அபிப்பிராயங்களுக்கு பிராயச்சித்தம் தேடுபவர்களாகவே உள்ளனர்.

அவர்கள் மனதளவில் வெட்கப்படுகிறார்கள், நடந்துபோன தவறுக்காக வேதனைப்படுகிறார்கள். வன்னியை மட்டுமல்ல, தமிழர் தாயகம் முழுவதையும் புனரமைக்கவும், அங்கு வாழும் மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் முன்வந்து பேசவேண்டியவர்கள் பேசுகிறார்கள்-தீர்வு எடுக்கிறார்கள்-திட்டமிடுகிறார்கள்.

ஒஸ்லோ மாநாடு சிறிலங்கா பிரதமரையும், தேசியத்தலைவரின் பிரதிநிதியாக அம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டு சென்றிருந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களையும் சமநிலையில் வைத்துக் கௌரவிக்கிறது. இருவரும் சமாதானம் என்ற தளத்தில் நின்று மனம்விட்டுப் பேச வாய்ப்பை வழங்குகிறது.

இங்கேதான், காலம் காலமாக சிங்களப் பேரினவாதம் பண்டாரநாயக்கா காலம் முதல் சந்திரிகா காலம்வரை உலக சமூகத்தை பயப்படுத்த பயன்படுத்திய பயங்கரவாதம், பயங்கரவாதிகள் என்ற சொற்களின் பின்னாலான 'பொய்மை' நொருங்குண்டு போய்விட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் எவரையும் கெஞ்சி யாசித்து பெற்ற ஒன்றல்ல. இதன்பின்னால் அளப்பரிய தியாகமும் அர்ப்பணிப்பும் மிக்க வீரமும், கொண்ட ஒரு போராட்டத்தின் வீறுமிக்கவரலாறே உள்ளது. இந்த உன்னத நிலையை பல்லாயிரக்கணக்கிலான எங்கள் மாவீரர்களும், தேசப்பற்றும், உறுதிகுலையா மனமும் கொண்ட மக்களும் தமது தாயக விடுதலைத் தாகத்துடன் போராடித்தான் எட்டவைத்துள்ளார்கள்.

உலகில் எவருக்குமே கிடைக்காத ஒரு மாபெரும் - இலட்சிய வேட்கை கொண்ட தலைவனின் ஆழமான சிந்தனையுடன் கூடிய மௌனமும், அர்த்தமிக்க அழுத்தமான பேச்சும், செயலும், தான் இந்த உன்னத நிலையை எட்டவைத்துள்ளது. இது தமிழ் மண் செய்த மாதவத்தின் பலன் என்றே கூறவேண்டும்.

எமது வரலாற்றை சிதைத்தழிக்க முயன்றவர்கள் வாய்பிளந்து நிற்க நாம் ஒரு புதிய வரலாறாகவே எமது தலைவனின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து நிமிர்ந்து நிற்கின்றோம்....

உலகம் இதனைத்தான் பிரமிப்புடன் பார்க்கிறது.

தூரனின் பார்வை

# 04-08-1987 - சுதுமலைப் பிரகடனமும் 27-11-2002 - மாவீரர் நாள் உரையும்

தமிழீழ வரலாற்றின் மற்றொரு முக்கியத்துவமிக்க, திருப்பு முனைகள் நிறைந்த காலகட்டத்தில் தேசியத் தலைவரின் குரல், தமிழீழ மக்களின் குரலாக சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் ஒரு தடவை சில செய்திகளை பிரகடனம் செய்துள்ளது.

சொல்லப்படவேண்டிய செய்திகள் சொல்லப்பட வேண்டியதருணத்தில், சொல்ல வேண்டிய முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதே இங்கு முக்கியத்துவமான விடயமாகும்.

இன்றைய சமாதான நகர்வுகளின் முன்னேற்றங்கள் தமிழ்மக்கள், சிங்கள மக்கள், சர்வதேசசமூகம் ஆகிய அனைத்துத்தரப்பிலும் பல்வேறு விதமான உணர்வுகளை கருத்துக்களை, விமர்சனங்களை, வினாக்களை எழுப்பிவரும் இந்த வேளையில், அனைத்துதரப்பினரதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, கருத்துக்களை உள்வாங்கி, விமர்சனங்களை அவதானித்து, வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பினை எமது தேசியத் தலைவர்ஒரு போதுமே தட்டிக்கழித்து புறக்கணித்ததில்லை.

ஆண்டு முழுவதும் பேசிப் பேசி அர்த்தமற்றவகையில், அறிவுபூர்வமான அணுகுமுறைகளுக்கு முகம் கொடுக்காது கருத்துப் பரம்பலைச் செய்வதாகக் கூறிக் கொண்டு மண்ணையும் மக்களையும் குழப்பிவரும் சகல தரப்பினரையும் வாயடைக்கச் செய்ய ஆண்டில் ஒரு நாளின் ஒரு சில மணித்துளிகள் மட்டுமே வாய் திறக்கும் அந்த மகத்தான தலைவனின் மாவீரர் நாள் உரை, ஒரு இனத்தின் வரலாற்றை அதன் கடந்த காலத்தை, சமகாலத்தை, எதிர்காலத்தை மதிப்பீடு செய்து, எமது இலட்சிய இலக்கின் உறுதியில் நாம் எவ்வாறு செயற்பட்டு வருகின்றோம் என்பதையும் எமது தேசிய, சர்வதேசிய, அரசியல் மற்றும் சமூகவியல் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் அந்த உரைக்காக ஆண்டு முழுவதும் காத்திருக்கும் அனைத்துத்தரப்பினரும் அந்த உரையின் வரலாற்றுச் சிறப்பினை நன்கு அறிவர்.

அந்த வகையில் இவ்வாண்டு மாவீரர் நாள் உரையும் பல முக்கியத்துவம் மிக்க செய்திகளை எமது மக்களுக்கும், சிறிலங்காஅரசுக்கும், பேரினவாதிகளுக்கும், ஏன் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கியுள்ளது.

மாறிவரும் உலகம், அதன் ஒழுங்கு, நாடுகளுக்கிடையே யான உறவுகள் போன்றவை உலக சமூகத்தை புதிய புதிய சவால்களை, அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவைத்துள்ள நிலை யில், உலகெங்கும் ஆதிக்க சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு சுதந்திரத்தையும் விடுதலை யையும் தேடும் மக்கள் தமது இலட்சிய இலக்கினை எட்டுவ தற்கு எத்தனையோ இடர்களையும் அழுத்தங்களையும் தகர்த்து முன்னேற வேண்டியநிலை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டஉணர்வுகளை, வெற்றிகளை, மற்றும் தியாகங்களை த் தம்முடைய சுய அரசியல் அபிலாசைகளை, ஆதிக்க வலுவை வென்றெடுப்பதற்காகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் சக்திகளை முறியடித்து இலக்குகளை எட்டுவதென்பது இலகுவான விடயமல்ல.

இராணுவ ரீதியிலான வெற்றிகளின் பலாபலன்களை இராஜ தந்திர ரீதியிலான, அரசியல் ரீதியிலான தீர்க்கதரிசன நோக்குடனான நகர்வுகள் மூலம் உறுதி செய்து கொள் வது என்பது கூட போராட்டத்தின் மற்றொரு முக்கியத்துவம் மிக்க கூறேயாகும்.

இந்த ராஜதந்திர யுத்தம் இராணுவரீதியிலான யுத்தத்தை விடவும் பல மடங்கு முக்கியத்துவம் கொண்டதாகும். எனினும் கூட இராணுவ ரீதியிலான உச்ச வெற்றிகளின் அடி ஆதாரமே இராஜதந்திர போரின் வெற்றிகளைத் தீர்மானிக்கும் பிரதான வலுவாகும்.

இந்த ஆதரவலுவின், மூலாதாரப் பலமாக இருப்பது எமது மாவீரர்களின் ஒப்பற்ற வீரமும் அர்ப்பணிப்புமிக்க தியாகமும் ஆகும்.

இவர்களின் வீரச் சுவடுகளின் வழிகாட்டல் தான் இன்று உலக அரசியல் அரங்கில், நாம் வெற்றிகரமான சாதனையாளர்களாக நிமிர்ந்து நிற்கக்காரணமாகும்.

இந்தக்கம்பீரத்துடன் தான் எமது தேசியத்தலைவர் இந்த ஆண்டு மாவீரர் நாள் உரையை நிகழ்த்தியிருக்கிறார் எனலாம்.

போரின் வெற்றிகளைக் குவிப்பவனால் மட்டுமே சமாதானம் பற்றியும் நம்பிக்கையுடன் பேச முடியும். 'சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை' என அவர் மாவீரர் நாள் உரையின் போது குறிப்பிட்டது வெறும் வார்த்தைகள் அல்ல என்பதை வரலாறு அறிந்தவர் அறிவர்.

ஈழப்போரின் பல்வேறு காலகட்டங்களில் சமாதானம் தொடர்பான குரல்எழுந்த போதெல்லாம் தமிழ்மக்கள் நம்பிக்கையுடன் தான் அதற்கு ஆதரவுக் குரல் வழங்கி வந்தார்கள்.

தமிழர்களுக்கு உரிமைகளைக் கூட இல்லை, இயல்பு வாழ்க்கையைக் கூடவழங்க விருப்பற்ற, திராணியற்ற, சமாதானத்தை ஆதிமார்க்கமாக நேசிக்காத சக்திகளின் "நாசகார வியூகங்களே" ஒவ்வொரு கட்டத்திலும் சமாதான நகர்வின் மீதான நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கியது.

திணிக்கப்பட்ட போருக்கு முகம் கொடுக்காது ஒதுங்கி ஓடும் சுபாவத்தையே தமிழ்மக் களி டம் இருந்து எதிர்பார்த்த சிறிலங்காவின் அரசுகள் அதனை தீரத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் எதிர்கொண்டு முறியடிக்கத் தொடங்கியதும் அதனைப் பயங்கரவாதம் எனப் புலம்பத் தொடங்கியது.

இவையெல்லாம் கடந்த கால வரலாறு கூறும் பதிவுக் குறிப்புகளாகும்.

ஆனால் வரலாறு இப்படி ஒரு திருப்பத்தை எட்டும் என எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

இந்தத்திருப்பம் மகத்தான இராணுவ வெற்றிகளையீட்டிய யுத்த நகர்வின் பின்னான - அதன் தொடர்ச்சியான இராஜதந்திர நகர்வின் அடிப்படையில உருவானதே யாகும்.

இந்த இராஜ தந்திர நகர்வைத் தான் தலைவர் .

இன்றைய உலக நிதர்சனத்தை அதன் யதார்த்த புறநிலைகளை நாம் உதாசீனம் செய்யப்படமுடியாது. இன்றைய காலத்தையும் இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாக புரிந்து காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப்பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது உலவரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன் நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே' -என்று தனது உரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இது பலரது சந்தேகங்களுக்கும், விமர்சனங்களுக்கும், ஒரு தெளிவான விளக்கத்தை வழங்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இந்த விளக்கம் பலரது புருவத்தை உயர்த்த வைத்திருக்கலாம் - இன்றும் பலருக்கு கலக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம் விடுதலைப்புலிகள் அரசியல் வியூகம், இராஜதந்திர ஆற்றல் ஒரு விஸ்வரூபமாகப் பரிமாணம் பெற்று வருவது இவர்களால் ஜீரணிக்க முடியாதது என்பது தெரிந்த விடயமேயாகும்.

இன்றைய சமாதானப் பேச்சுக்கள் எந்த அரசியல் தளத்தில் இருந்து நோக்கப்பட வேண்டும் என்பது குறித்த விளக்கமாகவும் இம்முறை தலைவரது உரை அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

'தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றிய போதும் இயல்பு நிலை தோன்றவில்லை' என அவர் கூறியிருப்பது சிறிலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் பல விடயங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒன்றாகும்.

அமைதி நிலைக்கான போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகளே முதலில் மேற்கொண்டனர். என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இயல்பு நிலைக்கு அவசியமான இராணுவ ஆக்கிரமிப்பை அரசு இன்னமும் நிக்கவில்லை.

இராணுவ வலயங்களில் அரண்களுக்கு மத்தியில் சமாதான சங்கீதத்தை இசைக்க முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி.

சுயநிர்ணய உரிமை குறித்து அவர் கூறியுள்ள விளக்கம் பேரினவாதிகளுக்கு புரிய வேண்டும். இல்லையேல் சமாதான நகர்வுக்கான பெரும் தடைக்கல் அவர்களாகவே இருக்கும்.

'சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை' என அவர் தனது உரையில் தமிழ்மக்களின் அபிலாசையை வெளிப்படுத்தியிருப்பது பல சந்தேகப் பிராணிகளின் குழப்பத்தன்மை கொண்ட கருத்துப் பரம்பல் நடவடிக்கைகளுக்கு ஆப்பு வைத்தாக அமைந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அவர் 'எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது. என அவர் கூறியிருப்பது 1987ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நான்காம் திகதி வரலாற்று திருப்பம் மிக்க சுதுமலைப் பிரகடனத்தின் போது சுவர் கூறியதை நினைவுபடுத்தச் செய்கின்றது.

அப்போது அவர் 'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாற போவதில்லை' என்றார்.

ஒரு இலட்சியவாதியான போராட்டவாதியின் கொள்கை யுறுதியானது - போராட்டவடிவ மாற்றத்தால்,வழிமுறை மாற்றத்தால் சிதையாது, என்பதையே இது காட்டுகிறது.

தன்னைத் தானே சந்தேகிப்பது தான், வீழ்ச்சிகளில் தலையாய வீழ்ச்சி. - மதாப் கத்தெரின் கஸ்பரின்

# மாவீரர் நாள் கணக்கெடுப்பு

**இம்முறை** மாவீரர் நாள் ஒப்பீட்டளவில் வித்தியாசமானது.

இதற்கு முந்திய எல்லா மாவீரர்நாள்களும் அநேகமாக யுத்தச் சூழலில்தான் அநுஷ்டிக்கப்பட்டன.

அப்பொழுதெல்லாம் சிங்களவர்கள் நிம்மதியாக நித்திரை கொள்வதேயில்லை. சிங்களவரைப் பொறுத்தவரை மிகவும் திகிலான ஒரு வாரம் அது.

அப்படிப்பார்த்தால் சிங்களவருக்குப் பீதியூட்டாத ஒரு மாவீரர் நாள் இதுதான்.

இதைவிட வேறொரு விசேசமும் உண்டு.அது - படையினரின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளில்மாவீரர்நாள் படையினரின் முன்னிலையிலேயே அநுஷ்டிக்கப்பட்டமை என்பது.

இதெல்லாம் தற்சமயம் நிலவும் யுத்த நிறுத்தச் சூழ்நிலையிலேயே சாத்தியமாகியது. இது ஒன்றைக்காட்டுகிறது- தமிழர்களுக்கு நிம்மதியில்லையென்றால் சிங்களவருக்கும் நிம்மதியில்லை. தமிழர்கள் பதட்டத்துடன் உள்ளவரை சிங்களவரும் நிம்மதியாக இருக்க முடியாது. தமிழர்களுக்குச் சமாதானம் உண்டாகாவிட்டால் சிங்களவருக்கும் சமாதானம் இல்லை.

ஒரு ஒடுக்கும் இனம் ஒரு போதும் நிம்மதியாக இருக்க முடியாது என்று கார்ல் மார்க்ஸ் கூறியது இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது. இம்முறை மாவீரர் நாள் தரும் செய்தியும் இதுதான்.

ஈழப்போரின் கடந்த சுமார் முப்பது ஆண்டுகாலப் போர் அநுபவங்களின் பின்னணியில் வைத்து கடந்த சுமார் பத்து மாதகால போர்நிறுத்த அநுபவங்களை மதிப்பீடு செய்தால் இது தெரியவரும்.

புள்ளி விபரங்கள் குருதி சிந்துவதில்லை என்று ஹேபர்ட் மார்க்யூஸ் கூறுகிறார். புள்ளி விபரங்கள்வெறுமனே இலக்கங்கள் மட்டும்அல்ல அதற்குமப்பால் ஒவ்வொரு இலக்கமும் ரத்தமும் சதையும் கனவுகளும் கலந்து செய்யப்பட்ட ஒரு உயிர் என்பது இங்கு முக்கியம்.

இதுவரை எமக்குக் கிடைத்திருக்கும் தகவலின்படி மொத்தம் 17,650இற்கும் குறையாத மாவீரர்களும் 82,000 இற்கும் குறையாத பொதுசனங்களுமாக தமிழர்களின் மொத்த இழப்பு ஒரு லட்சத்துக்கு கிட்ட வரும்.

ஆனால் முறையான ஒரு கணக்கெடுப்பு வீட்டுக்கு வீடு நடத்தப்பட்டு புகளிட நாடுகளிலும் நடத்தப்பட்டால் இத்தொகை திட்டவட்டமாக ஒரு லட்சத்தையும் தாண்டும்.

வடக்கில் மட்டும் 10,000 அனாதைச்சிறுவர்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் மட்டும் 19,100 விதவைகள் உண்டு. கிழக்கில் 8500 விதவைகள் உண்டு. இந்த விதவையரில் எழுபது விஃதமானவர்கள் முப்பது வயது கூட நிரம்பாத இளம் விதவைகள்.

இது தவிர ஈழப்போரின் அகதிகள் மொத்தம் பன்னிரண்டு லட்சம் என்று கூறப்படுகிறது. இதில் சுமார் ஏழரை லட்சம் தமிழர்கள் புகலிடந்தேடிகளாய் பூமியின் எல்லாக் கண்டங்களுக்கும் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்.

மறுமுனையில்- சிங்களவரைப் பொறுத்தவரை இதுவரை மொத்தம் 3500 பொதுசனங்கள் கொல்லப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

சுமார் 33,000 பேர் அங்கே அங்கவீனமடைந்துள்ளார்கள். படைத்தரப்பில் மொத்தம் 17,000க்குமேல் கொல்லப்பட்டிருப்பதாகவும் சுமார் 3500 பேர்வரை காணாமல் போயிருப்பதாகவும் சுமார் 18000 பேர்வரை அங்கவீனமடைந்திருப்பதாகவும் கூறுப்படுகிறது.

ஆனால் குறிப்பாக 1983 இற்கும் 2000இற்கும் இடையில் மட்டும் சுமார் 17000 துருப்புக்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

அதோடு இதுவரை சுமார் முப்பதினாயிரத்துக்கும் அதிகமான துருப்புக்கள் படையணிகளை விட்டுத்தப்பியோடி ஆங்காங்கே பாதாள உலகக் கும்பல்களில் தஞ்சமடைந்திருப்பதாகவும் கூறுப்படுகிறது.

ஆனால் இதெல்லாம் உத்தியோகபூர்வ தகவல்களே. மாறாக- உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி இத்தொகை பலமடங்காயிருக்கும் என்று நம்பப்படுகிறது.

இதைவிட இன்னுமொரு பயங்கரமான கணக்கு இருக்கிறது. அது - ஜே.வி.பி.யின் இரண்டாவது எழுச்சிக் காலத்தில் பரஸ்பரம் அரசாலும்



ஜே.வி.பி யாலும் கொல்லப்பட்ட எரிக்கப்பட்ட மற்றும் காணாமல் போன சிங்களவரின் தொகை.

இதுவும் ஈழப்போரின் கணக்கிற்குள்தான் வரும். எப்படியென்றால் - தமிழர்களோடு சேர்ந்து பிரச்சினையை இலங்கைத்தீவுக்குள் தீர்த்துக் கொள்ளத் தவறியபோது இந்தியா தலையிட்டது. இதன் விளைவாக உண்டாகிய இந்திய- இலங்கை உடன்படிக்கையும் ஐ.பி.கே.எவ் இன் வருகையும்தான் இரண்டாவது ஜே.வி.பி எழுச்சிக்குக் காரணம்.

தீர்க்கப்படாத இனப் பிரச்சினை என்ற ஆறாத புண்ணுக்கு கட்டிய நெறியே ஜே.வி.பியின் இரண்டாவது எழுச்சி என்று கூறினார். கவிஞரும், முன்பு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த திசை பத்திரிகையின் ஆசிரியருமாகிய மு.பொன்னம்பலம்.

ஜே.பி.பியின் மறு எழுச்சியின் போது சுமார் 12,000 பேர்



காணாமல் போனதாக உத்தியோகபூர்வதகவல்கள் கூறுகின்றன. ஆனால் இது 60,000 என்றொரு தகவலும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் என்றொரு தகவலும் உண்டு.

இது தொடர்பாக ஒரு சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதியுடன் கதைத்த போது அவர் கூறினார் ஈழப்போரில் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட அட்டூழியங்களை விடவும் ஜே.வி.பி.யின் மறு எழுச்சியின் போது சிங்களவருக்குச் செய்யப்பட்ட அட்டூழியங்கள் ஒப்பீட்டளவில் அதிகம் என்று.

கைதிகள் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைகளுக்குப் பொறுப்பாயிருந்த மேற்படி தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதி ஈழப்போரில் தமிழர்களுக்கு நிகழ்ந்தவற்றையும் பிரேமதாஸ காலத்தில் சிங்களவருக்கு நிகழ்ந்தவற்றையும் ஒப்பிட்டுக் கூறும் போது ஜே.வி.பியின் இரண்டாவது எழுச்சி மிகவும் தனிமைப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டது என்றபடியால் அதில் நிகழ்ந்த பயங்கரங்கள் அதிகம் வெளியில் சொல்லப்படவேயில்லை என்று மேலும் சொன்னார்.

**புள்ளி விபரங்கள் குருதி சிந்துவதில்லை என்று ஹேபர்ட் மார்க்யு,ஸ் கூறுகிறார். புள்ளிவிபரங்கள் வெறுமனே இலக்கங்கள் மட்டும்அல்ல அதற்குமப்பால் ஒவ்வொரு இலக்கமும் ரத்தமும் சதையும் கனவுகளும் கலந்து செய்யப்பட்ட ஒரு உயிர் என்பது இங்கு முக்கியம்.**

இதன்படி ஜே.வி.பியின் இரண்டாவது எழுச்சியின் போது கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போன சிங்களவரின் மொத்தத்தொகை ஒருலட்சத்துக்குக் குறையாது என்று பொதுவாக ஊகிக்கப்படுகிறது.

அதாவது புண்ணை விட புண்ணுக்கு கட்டிய நெறி வலி மிகுந்ததாக இருந்தது என்பது.

இதன்படி பார்த் தால்-கடந்த சுமார் முப்பது வருட கால ஈழப்போரில் தமிழர்களை விட சிங்களவர்களே அதிகம் விலை கொடுத்திருப்பது தெரியவரும்.

ஒரு காலம் இலங்கைத்தீவு தீவுகளின் ராஜகுமாரி என்று அழைக்கப்பட்டது. ஜே.ஆர் .ஜெவர்த்தன அதை "தீவுகளின் பிச்சைக்காரி"யாக்கினர்.

பிறகு பிரேமதாஸஅதை "காணாமல் போனவர்களை அதிகமுடைய ஒரு தீவு"ஆக்கினார்.

தொண்ணூறுகளின் முற்பாதியில் இலங்கைத்தீவு "சிறுவர் விபச்சாரர்களின் சொர்க்கம்" என்று அழைக் கப்பட்டது.

அந்நாட்களில் இலங்கைத் தீவிலிருந்த 12 வயதுக்கும்

**நிலாந்தன்**

14வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர் விபச்சாரர்களின் மொத்தத் தொகை சுமார் 30,000என்று கூறுப்பட்டது. இது அப்போது இலங்கைத்தீவிலிருந்த பிக்குகளின் மொத்தத் தொகைக்குச் சமம்.

இப்பொழுது இலங்கைத்தீவு அதிகம் பணிப்பெண்களை மேற்காசியாவுக்கு அனுப்பும் ஒரு தீவு.

பெயர்தான் பணிப்பெண்கள். ஆனால் யதார்த்தத்தில் அவர்கள் அரபு ஷேக்குகளின் பாலியல் தீனிகளாகவே போகிறார்கள்.

அங்கேயவர்கள் அநேகமாக சிதைக்கப்படுகிறார்கள். அல்லது கொல்லப்படுகிறார்கள். அல்லது தற்கொலை செய்யத் தூண்டப்படுகிறார்கள்.

இறந்தபின் அவர்களுடைய உறுப்புக்கள் திருடி விற்கப்படுகின்றன.

ஒரு காலம் தேரவாத பௌத்தத்தின் மூலச்சுவடிகளைத் தேடிவரும் எவரும் முடிவில் இலங்கைத்தீவையே வந்தடைந்தார்கள். ஐதீகக் கதைகளில் தனக்கென்று ஒரு புனிதமான மகிமை பொருந்திய இடத்தைப் பெற்றிருந்தது இத்தீவு. ஆனால் இன்று தனது பெண்களை மேற்காசியாவுக்கு பாலியல் தொழிலாளர்களாய் அனுப்பி பணம் சம்பாதிக்கும் ஒரு நிலை.

தற்சமயம் இலங்கைத்தீவில் அதிகம் வருமானமீட்டும் ஒரு தொழிற்துறை இது.

ஒரு புறம் பாதாள உலகங்களில் மறைந்திருக்கும் யுத்த அநுபவமுடைய ஆயுதபாணிகளான தப்பியோடிகளின் அட்டகாசம்.

இன்னொரு புறம் உறுப்புக்கள் திருடப்பட்டு பிணங்களாய்த் திரும்பி வரும் பணிப் பெண்கள்.

இதெல்லாம் சுமார் 30 ஆண்டுகால ஈழப்போரில் சிங்களவர் சம்பாதித்தவை.

கடன் வாங்கிச் செய்யப்பட்ட யுத்தம் சிங்களவர்களை பிச்சைக்காரர்களாய்,சிறுவர் விபச்சாரர்களாய், பாலியல் தீனிகளாய் ஆக்கி விட்டிருக்கிறது.

கடந்த வருடம் சமுர்த்தி வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் ஐம்பது சதவீஃதத்துக்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் நிவாரணம் பெற்றிருக்கின்றன. அந்தளவுக்கு நிலமை படு கேவலமாயுள்ளது.

நாடு இனித்தாங்காது என்ற ஒரு நிலையில்தான் சர்வதேச நிர்ப்பந்தமும் சேர்ந்து இப்படியொரு யுத்த நிறுத்தம் வந்திருக்கிறது.

இப்பொழுது ரணில்- மொறகொட அரசு 'எலக்ரோனிக் லங்கா' பற்றிக் கனவு காண்பதாகத்தெரிகிறது.

ஜே.ஆர் இலங்கைத்தீவை இன்னொரு சிங்கப்பூர் ஆக மாற்றும் கனவோடிருந்தார். ஆனால் ஈழப்போர் அவரது கனவுகளைச் சிதறடித்தது.

இப்பொழுது அவருடைய மருமகன் இந்தியாவின் ஹைதராபாத் மாதிரியைப் பின்பற்றி இச்சிறுதீவை ஒரு எலக்ரோனிக் தீவாக மாற்றி விடக் கனவு காண்கின்றார்.

எல்லாவற்றுக்கும் முதலில் சமாதானம் வரவேண்டும்.

நடந்து முடிந்த மாவீரர் நாளில் சிங்களவர் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிந்தமை என்பது யுத்தத்தின் வெற்றிகளால் அல்ல யுத்தநிறுத்தத்தின் வெற்றிகளாலேயே என்பதைசிங்களவர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் தமது தியாகிகளை நினைவு கூரும் போது சிங்களவர்கள் நித்திரை கெட்டு தமது பதுங்குகுழிகளுக்குள் உசார் நிலையில் இருக்கவேண்டி வந்தமை என்பது இச்சிறிய தீவை தமிழர்களுடன் சேர்ந்து பகிரத்தயாராயில்லாத படியால் தான்.

சமாதானத்தின் பெறுமதியை, சமாதானத்தின் கனி எத்துணை ருசியானது என்பதை இம்முறை மாவீரர்நாள் எல்லாருக்கும் உணர்த்தியிருக்கிறது.

ஈழப்போரின் ஐந்தொகையைக் கணக்குப் பார்க்க வேண்டியவேளை வந்திருக்கிறது.

சிங்களத்தில் ஒரு முதுமொழியிருக்கிறது.

"நகத்தால் அகற்றப்படக் கூடிய ஒன்றை கோடாலியால் அகற்றும் ஒரு நிலை வரும் வரை காத்திருக்கக் கூடாது."

தன் மானத்தை விட்டுக் கொடுப்பதை விட, வீரமுள்ள மனிதன் மரணத்தையே விரும்புவான். -மகாத்மா காந்தி

# நறுக்கென...



## சந்திரிகாவின் பணிப்பும் மக்களின் கணிப்பும்

நெடுந்தீவுவிவகாரத்தில் விடுதலைப்புலிகளுடன் பேசி சமரசத்தீர்வு காணுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு சிறிலங்காவின் நிறைவேற்று அதி-கார சனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அதுவும் விசேட பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் வைத்தே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

நெடுந்தீவில் பதற்றநிலை உருவாகக் காரணம் என்ன என்பதை முதலில் சனாதிபதி சந்திரிகா அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

முதற்காரணம் கடற்படை, துணைக் காரணம் ஈ.பி.டி.பி, நிமித்த காரணம் நெடுந்தீவில் பதற்றத்தை ஏற்படுத்தி அமைதியைக்குலைத்தல்.

ஆக மூன்று காரணங்களுக்கும் மூல காரணம் கடற்படை, துணைப்படை இரண் டிற்கும் தலைமைத்தளபதியென்று தன்னைப் பிரகடனம் செய்வதில் பெருமை கண்டு வரும் சந்திரிகாவே தான்.

நெடுந்தீவில் பிரச்சினை ஏற்படுத்திய சம்பவம் கடற்படை ஈ.பி.டி.பியினரை ஆயுதங்களுடன் கொண்டு வந்து முகாமமைக்க தரையிறக்கியது தான்.

அவர்களின் மீள் ஊடுருவலை எதிர்த்தது அந்தத் தீவின் மண்ணின் மைந்தர்கள் தான். ஆகவே இங்கு ஏற்பட்டுள்ள பதற்றத்திற்கு விடுதலைப் புலிகளின் பங்கு எதுவுமில்லை.

மக்களுக்கு ஈ.பி.டி.பி யினர் மீதுள்ள வெறுப்புத்தான் அவர்களின் தரையிறக்க, மீள் ஊடுருவலை எதிர்க்க வைத்தது.

இதற்குள் விடுதலைப்புலிகளை சம்பந்தப்படுத்த சனாதிபதி அம்மணியார் நினைப்பது தான் வேடிக்கையானதாகும்.

விடுதலைப்புலிகளுடன் பேசி சமாதானத்தை - சமரசத் தீர்வினை எட்டுமாறு பாதுகாப்பு அமைச்சருக்கு பணிப்புரை விடுத்திருப்பது எந்த நோக்கிலானது என்பது தான் புரியவில்லை.

தேசிய பிரச்சினைக்கு - இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் அரசு பேசுவதை நிராகரித்து நாளொரு கருத்தை வெளியிட்டு சமாதானத்தை எட்டுவதற்கான சமரசத் தீர்வை குழப்பமுயலும் சந்திரிகா அம்மையார் ஈ.பி.டி.பியினருக்கு பரிந்து, விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு பாதுகாப்பு அமைச்சை பணித்ததன் மூலம், விடுதலைப்புலிகளுடன் பேசாது, ஈ.பி.டி.பி யின் பிரச்சினையைக் கூட தீர்க்க முடியாது என்ற உண்மையை சந்திரிகா புரிந்து கொண்டுள்ளார் என்பதையே தெளிவாக்குகின்றது.



## ஜே.வி.பியினரின் குழப்பங்களும் ஈ.பி.டி.பியினரின் கலகங்களும்

சமாதான முயற்சிகள் நம்பிக்கை தரும் வகையில் ஒவ்வொரு கட்டமாக முன்னெடுக்கப்படும் நிலையில் - இதனைக் குழப்புவதற்கான தீவிர முயற்சிகளில் சிறிலங்காவின் சனாதிபதி தலைமையிலான பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி கூட்டணி மிகத் தீவிரமாக இயங்கிவருகின்றன.

சந்திரிகா 'தனது கணவரை கொன்ற கயவர்கள்' என அவர் வாயாலேயே விரல் சுட்டிக்காட்டி வெறுத்துரைத்த ஜே.வி.பி யினருடன் வைத்துள்ள கூட்டு சமாதா னத்தை பொறுத்த வரை மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாக சிறிலங்காவைப் பொறுத்த வரையிலும் ஒரு ஆபத்தான சமிக்ஞை யாகவே உள்ளது.

ஒரு புறம் தனது நிறைவேற்று அதிகார வலுவை வைத்து அரசை அச்சுறுத்திப் பணிய வைக்க அதீத முயற்சியெடுத்துவரும் சந்திரிகா அது கை கூடாத பட்சத்தில் மாற்று வழிகளையும் தயாராகவே வைத்துள்ளார். சமாதான முயற்சிகளின் போரான அமைதி நிலையானது பொ.ஐ.முன்னணியையும் தன்னை யும் வெகு வேகமாக தென்பகுதி மக்களிடையே அன்னியப்படுத்தி வருவதை சகிக்க முடியாதவரான சந்திரிகா இந்த அமைதி நிலையைக் குழப்ப நாசகார வியூகங்களை வகுத்து மெல்ல மெல்ல செயற்படுத்தி வருகிறார் எனக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இதில் ஜே.வி.பியையும் ,ஈ.பி.டி.பி யினரையும் குழப்பத்தை உண்டு பண்ணும் தனது ஏவல் சக்திகளாக சந்திரிகா பயன்படுத்தத் தொடங்கியுள்ளார். தென்னிலங்கையில் மீண்டும் ஒரு முறை ஜே.வி.பியினரின் அராஜக செயல்களை கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் அரசுக்கு அவப்பெயரையும் நெருக்கடியையும் ஏற்படுத்துவது ஒரு வியூகம் என்றால் வடக்கிலும்-கிழக்கிலும் ஈ.பி.டி.பியினரை தனது ஆதரவு இராணுவ கடற்படை அதிகாரிகளின் அனுசரணையுடன் ஊடுருவவைத்து அவர்கள் வழமையான மக்கள் விரோத நடவடிக்கைகளை ஊக்குவித்து விடுதலைப்புலிகளை சினங்கொள்ள வைத்து போர்நிறுத்தத்தை மீறவைத்து மீண்டும் போரை தொடங்க வைப்பது மற்ற வியூகமாகும்.

ஜே.வி.பியின் நடவடிக்கைகள் மெல்ல மெல்ல ஆரம்பித்து விட்டது. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவனின் படுகொலை இதன் முதற்படி. வடக்கில் நெடுந்தீவில் கடற்படையினர் ஈ.பி.டி.பி யினர் ஆயுதபாணிகளாக தரையிறக்கியதன் மூலம் பதற்றத்தை ஏற்படுத்த தொடங்கியுள்ளது. அடுத்த படி இதன் பின்னணியில் சந்திரிகாவின் பதவி வெறியும் இரத்தக் கறை படிந்த கைகளும் இருக்கின்றன.

ஜே.வி.பியினரின் அலுவலகங்களையும் ஈ.பி.டி.பியினரின்முகாம்களையும் கடற்படையும் இராணுவமும் பாதுகாக்க வேண்டுமென்றஅம்மணியின் பணிப்பு இதனைத் துள்ளியமாகவே எடுத்துக்கா ட்டுகிறது.



## அமெரிக்கத் தூதரின் கருத்தும் தமிழ் மக்களின் விருப்பும் .

'ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அமெரிக்காவின் சார்பில் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் அவர்கள் கலந்து கொள்வதானது இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்கா காட்டும் ஆழமான கரிசனையை வெளிப் படுத்துகிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது' என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவது என்பது ஒரு நீண்ட பயணம் என்பதுடன் இதற்காக நிறையச் செய்ய வேண்டியுமுள்ளது எனவும் அவர் கூறியுள்ளமையானது பிரச்சினையின் ஆழத்தை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளமையை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

ஆனாலும் அமெரிக்கா தமிழ்மக்களின் பிரச்சினைகளை அவர்களின் அபிலாசைகளின் அடித்தளத்தில் நின்று அனுகுகின்றதா என்ற கேள்வி தமிழ்மக்களின் மனதில் எழவே செய்கிறது.

அமைதி முயற்சிகளுக்குதனது ஆதரவை வழங்கும் அதேநேரம் அமைதி முயற்சிக் கான முக்கிய பங்காளிகளில் பிரதான மானவர்களான விடுதலைப் புலிகளை இன்னமும் பயங்கரவாதிகள் என்ற பட்டியலில் இருந்து நீக்காமல் அவர்கள் முன்வைத்து போராடிய போராட்டத்திற்கான அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எட்ட முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை களுக்கு பரந்த அளவில் ஆதரவை வழங்குவது என்பதை சந்தேகத்துடன் நோக்க வேண்டிய நிலையே இன்றும் தொடர்கிறது .

கைவிலங்கை பூட்டிவைத்து விட்டு கைகுலுக்க கை நீட்டினால் எப்படி கைகுலுக்குவதாம்.....?

ஒருபுறம் சமாதானத்திற்கான ஒத்துழைப்பு இன்னொருபுறம் இன வெறியும் போர்வெறியும் கொண்ட சிறிலங்கா படைகளுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்குவது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமாக இல்லை .

சந்தேகமும் புரிந்துணர்வின்மையும் சமாதானத்தின் விரோதிகள். அதேபோல் பக்கச் சார்பு நிலை என்பதுஅமைதிக்கு எதிரி. அமெரிக்கா சிறிலங்கா அரசையும் விடுதலைப் புலிகளையும் சமநிலையில் வைத்து சமாதானத்தை ஆதரிக்கும் தனது அக்கறையை வெளிப்படுத்தினால் அதில் ஏதாவது நம்பிக்கையும் அர்த்தமும் இருக்கும்.

இல்லையேல் அமெரிக்கவின் கரிசனை சிறிலங்கா அரசை திருப்திப்படுத்துவதற்கான ஒன்றாகவே இருக்கும் என்றே தமிழ் மக்கள் கருத வேண்டியநிலை ஏற்படும்.



## மகாநாயக்கரின் கோரிக்கையும் தமிழ் மக்களின் கோரிக்கையும்

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் எனக் கூறும் சுமார் 30 ஆயிரம் சிங்கள மக்களை மீள்குடி யமர்த்த வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரோவான உடுகம சிறிபுத்த ரகித்த தேரர் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார். சிங்கள மக்களின் வாழ்வுரிமைகள் மீதான மகாநாயக்கரின் அக்கறையையும் அபிமானத்தையும் பாராட்டுகிறோம். வரவேற்கிறோம்

அதுமட்டுமல்ல சோமாவத்சைத்திய, திருகோணமலைமற்றும் திரியாய் ஆகிய பிரதேசங்களிலும் சிங்கள மக்கள் மீளக் குடியேற்றப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பா ணத்திலுள்ள சிங்கள மகாவித்தியாலயம் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் மகாநாயக்கர் தனது அபிலாசைகளை வெளியிட்டுள் ளார்.

நல்லது.ஆனால் இவற்றையெல்லாம் கூறும் மகாநாயக்கர் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளவென மதவாத பிக்குகளும், இனவாத அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து மனிதநேயத்திற்கும் மனோதர் மத்திற்கும் ஏன் பௌத்த தர்மத்திற்கும் கூட எதிரானவகையில் அங்கு பரம்பரை பரம்பரை யாக வாழ்ந்த தமிழ் மக்களை அவர்களின் சொந்த பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து விரட்டிய கொடுமையைப் பற்றி என்ன கூறப்போகிறார்?

திருகோணமலை, மட்டக்களப்பு, மணலாறு பதவியா என நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களின் சொந்த வாழ்விடங்களுக்கு சென்று தங்களின் சொந்த நிலங்களில் தமது வாழ்வை மீண்டும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும், சுதந்திரத்து டனும் தொடர இதே மகாநாயக்கர் உதவுவாரா? இராணுவ அச்சுறுத்தல்- ஆக்கிரமிப்பு, இனக்கலவரங்கள், சிங்களக்குடியேற்றம் என திட்டமிட்ட முறையில் மேற் கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை அவர்களின் சொந்த பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து ஓடவைத்து காடுகளிலும், வெளிகளிலும் தங்கவைத்த கொடுமையை மகாநாயக்கர் அறிவாரா?

இன்றும் கூட தமிழ்மக்களின் எத்தனை பாடசாலைகளை இராணுவம் முகாம்களாகப் பயன்படுத்தி அழித்துள்ளது. அதனையெல்லாம் மகாநாயக்கர் புரிந்து கொள்வாரா?

இவற்றுக்கெல்லாம் மகாநாயக்கர் என்ன பதில் சொல்லப் போகிறார்? இந்தத் தமிழர்கள் எல்லாம் அவரவர் இடங்களில் சென்று குடியேற அதனை ஆக்கிர மித்துள்ளவர்களை வெளியேற்றித்தரும் நேர்மை மகாநாயக்கருக்கு இருக்குமாயின் அவரது கோரிக்கையிலும் நியாயம் இருக்கும்....இல்லையேல்....??

தான் அழியாது, தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்தல், இயற்கையின் முதல் விதி . -ஜான் ரே

## 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' ஈழத்தமிழர்கள் முன் வைத்துள்ள பணிகள். -3

# போரிலக்கியங்களின் பெருக்கத்தை அவாவி நின்ற 'தமிழ்க்கூடல்'



மானுடத்தின் தமிழ்க்கூடல் பற்றி எழுத முனைந்து விரிந்து செல்லும் இந்தப் பத்தி பலருக்கும் அலுப்புத்தட்டக்கூடியதாக இருக்கலாம் என்கின்ற அச்சம் என்னிடம் உண்டு.உண்மையில் இது மானுடத்தின் தமிழ்க்கூடல் பற்றிய ஒரு பதிவாகவன்றி, 'கூடல்' எழுப்பியுள்ள சில அதிர்வுகள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால்,இது,கூடலுடனும்,அதனைத் தாண்டி அதற்கு வெளியேயும் மாறிமாறிப் பயணிக்கிறது.பத்தியின் நோக்கம்,'கூடல்'எழுப்பிய உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதுடன்,அதனோடு ஒட்டி நாம் சிந்திக்க வேண்டிய பல விடயங்களையும் முன்வைக்கமுயல்வதாகும்.தனிநபர் துதிபாடலோ,அன்றி,யாரையும் தனிப்படத் தாக்குவதோ இப்பத்தியின் நோக்கமல்ல. இதன் நோக்கமெல்லாம்,இப்பத்தி எழுப்பிச் செல்லும் உணர்வுகளுக்கான மனந்திறந்த எதிர்வினைகள்,கருத்துப் பரிமாறல்கள்,விவாதங்கள் எழவேண்டும் என்பதே. இது இன்று எமது தமிழ்ச் சூழல் பற்றிச் சிந்திக்க விளைகின்ற அனைவரதும் பொறுப்புள்ள ஒரு செயற்பாடாக அமையும் என நம்பித் தொடர்கிறேன்.

பொதுவாக கலை இலக்கிய மரபில் காணப்படும் 'சீரியஸ்'- ஜனரஞ்சகம் என்கின்ற பிளவு தொடர்பாகவும்,அதிலுள்ள ஆபத்துப் பற்றியும்,அதனை போர்ச்சூழல் எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதுபற்றியும் சென்ற பத்தியில் குறிப்பிட்டேன். ஆனால் நிலாந்தன் குறிப்பிடும் இந்தப் 'போர்ச்சூழலால் இன்னமும் புடம் போடப்படாதவர்களும் நம்மத்தியில் இருக்கவே செய்கிறார்கள். அனுபவப் பகிர்வும், மனந்திறந்த கருத்துப் பரிமாற்றமும் இந்த இடைவெளியை இல்லா தொழிக்கும் என்று நம்புகிறேன்.

நிலாந்தனது உரையைத் தொடர்ந்து. அரங்கச் சூழலில் எழுந்த சில எதிர்வினைகளை என்னால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அவற்றுள் ஒன்று 'நிலாந்தன் வன்னி மையவாதம் பேசுகிறார்' என்பது.இது ஆபத்தான, யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாத ஒரு அவசர எதிர்வினை என்றே சொல்லவேண்டும்.ஏலவே இங்கு குறிப்பிடப்பட்டதுபோல்,ஈழப் போராட்ட வரலாற்றில்,கடந்த 6-7ஆண்டுகால வன்னிப் போர்க்காலம் மிகமுக்கியமானது.இதுபற்றி நான் ஏலவே விரிவாகக் குறிப்பிட்டு விட்டேன். இந்த போராட்டமும், அதன்வழி ஈழத்தமிழர்கள் நேரடியாகப் பெற்ற அனுபவங்களும், அதன்வழி மறுகண்டுபிடிப்புச் செய்யப்பட்டுள்ள நம்முடையவை பலதையும், அந்த அனுபவம் வாய்க்கப் பெறாதவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய தனது கடமையையே நிலாந்தன் தனது உரையில் செய்தார் எனலாம்.இதில் எந்த மையவாதமும் தென்படவில்லை. அவர் தேவையான இடங்களில் தேவையான களங்களைக் குறிப்பிட்டுச் சொல்லத் தவறவில்லை. ஈழப்போராட்டத்தில் 'ஜயசிக்குறு' பற்றியும், 'ஓயாத அலைகள்' பற்றியும் பேசினால் அது வன்னிமையவாதம் அல்ல.இவை இடம்பெற்ற களங்கள் வன்னி. ஆனால்,இந்தப் போராட்டங்கள் முழு தமிழர் தாயகத்தின் பங்களிப்புடனும், பங்கேற்புடனும்,வன்னிக் களத்தில் மேற்கொள்ளப்பட்டவை.இதைச் சரியாகப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. இங்கு தாழ்வுச்சிக்கலுக்கோ, உயர்வுச் சிந்தனைக்கோ இடமில்லை.

நிலாந்தனது இந்தக் கருத்துக்களுடன் ஒத்துப்போகின்ற பல கருத்துக்கள் மாநாட்டில் பலராலும் முன்வைக்கப்பட்டன.ஒத்தும் முரண்பட்டும் நின்ற இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் அன்றி, சில கருத்துக்களை மட்டும் இங்கு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம். இவற்றுள் குறிப்பாக,தமிழர்கள் இந்தப் போராட்டத்துக்குக் கொடுத்த விலை சரியாகப் பதிவுசெய்யப்படாதது பற்றிய மனஆதங்கம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. போரில் பல சாதனைகளை, அனுபவங்களைப் பெற்ற வன்னி, அவற்றைப் பதிவுசெய்யும் படைப்புக்களை போதியளவுக்குத் தரவில்லை என்கின்ற ஆதங்கமே இது.

விழாவின் இரண்டாம்நாள் நிகழ்வில் நிறைவுரையாற்றிய விடுதலைப் புலிகளது அரசியல் முக்கியஸ்தர் சீ.புலித்தேவன் அவர்கள் இந்த விடயத்தில் சில முக்கிய குறிப்புக்களைச் சொன்னதுடன், வேண்டுகோள்களையும் கலை இலக்கிய கர்த்தாக்களுக்கு விடுத்தார்.உலகில் உன்னத போராட்டங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் ரஷ்ய விடுதலைப்போராட்டம், உலகுக்குத் தந்துள்ள ஆக்க இலக்கியங்கள் பற்றியும், அச்சூழலில் பணியாற்றிய ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பற்றியும் குறிப்பட்ட அவர், தமிழ்ச்சூழலிலும் இவ்வாறு தமிழர்களது போராட்ட அனுபவங்கள், கள அனுபவங்கள் ஆக்க இலக்கியங்களாக பதிவுசெய்யப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார்.

இந்த இடத்தில்,முதல்நாள் நிகழ்வில் குழந்தை இலக்கியம் பற்றிய மாலை அமர்வில் எழுத்தாளர் செ.யோகநாதன் குறிப்பிட்ட ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. அதாவது குழந்தை இலக்கியத்தின் பேசுபொருளாக, இந்தப் போராட்ட அனுபவங்களும் பதிவுசெய்யப்பட வேண்டும் என்கின்ற ஒரு ஆலோசனையை அவர் அங்கு முன்வைத்தார். இது எமது சூழலோடு ஒன்றிய ஒரு முக்கியமான விடயம் என்றே படுகிறது. பொதுவாக குழந்தை இலக்கியம், அல்லது குழந்தைகளுக்கான படைப்புக்கள் பற்றிப் பேசுபவர்கள், அவை விளையாட்டுத் தன்மை கொண்டவையாகவும், வன்முறைகளற்று, மென்மையானவையாகவும் இருக்க வேண்டும் என்கின்ற ஒரு கருத்தை முன்வைப்பார்கள்.இது எம்மைப் போன்ற ஒரு போராட்டச் சூழல் நிறைந்த ஒரு தேசத்தில் எவ்வளவு தூரம் பொருத்தமானது என்கின்ற கேள்வி எழுகிறது.

மேலைத் தேசத்தால் முன்வைக்கப்படுகின்ற பல கோட்பாடுகளையும் போலவே, இதுவும், மேலைத்தேசச் சூழலுக்கு மட்டும், அல்லது அதையொத்த சூழல்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியதே. ஆனால் வாசலிலே குண்டுகளை நித்தம் சந்திக்கின்ற, மரணங்கள் மலிந்திருந்த ஒரு சூழலில் பட்டினியுடன், காய்ந்த வயிற்றுடன் இருக்கும் ஒரு குழந்தைக்கு அதனுடைய வாழ்க்கை யதார்த்தத்தை மறைக்கவேண்டிய அவசியமென்ன?.இவ்வாறு மறைப்பதென்பது, அக்குழந்தைக்கு அதனது சூழலை மறைக்கின்ற, அல்லது காட்டமறுக்கின்ற ஒரு அநியாயமாகாதா? தான் கைகளில் வைத்து விளையாடிய, ரைட் சகோதரர்களது அற்புத கண்டுபிடிப்பு என்று கற்றுக்கொண்ட விமானம் தன் குடில்மீது குண்டுகள் வீசி, தனது கண் முன்னாலேயே தனது உறவுகளைச் சதைப் பிண்டமாக்கும் போது ,தான் வாழ்க்கையில், புத்தகங்களில்கற்றவை பற்றி அந்தக் குழந்தை என்ன நினைக்கும்? தான் புத்தகங்களிலும், கலைப் படைப்புக்களிலும் தரிசித்த ஆனந்த உலகு, தன்கண் முன்னால் சிதையும்போது அந்தக் குழந்தையின் மனநிலை எவ்வளவு பாதிப்புக்களுக்கு உள்ளாகும்.அது மனநோய்க்கு உள்ளாகும் வாய்ப்புத் தானே பெருக்கும்? இதற்கு எமது சமூகத்தில் எத்தனை உதாரணங்களைச் சொல்லமுடியும்.

தமிழர்களாகிய எமக்கு வாய்த்த இந்த யதார்த்த வாழ்வுபற்றி முன் கூட்டியே எமது குழந்தைகளுக்குச் சொல்லிவைப்பதுடன், அதற்குப் பின்னாலுள்ள காரண காரியங்களையும் கலைப்படைப்புக்களூடாக எமது குழந்தைகளுக்கு அறியவைத்தால், அவை தமது அன்றாட வாழ்வின் யதார்த்தமாகும் போது,குழந்தை அச்சமடையாமல், துணிவுடன் அவற்றை எதிர்கொள்கிறது.இதனால்தான் எமது குழந்தை நாடகங்கள் பலவற்றை கோப்பாய் பாலசிங்கம்,புதுவை அன்பன் (புதூர் செல்வம்) போன்றோர் கோரமான போராட்ட அவலங்களைச் சித்திரிப்பவையாக ஆக்கினர். இது அன்றாட நடைமுறை வாழ்க்கை அவர்களுக்குக் கற்றுத் தந்த அரங்கப் பாடம். இதனை எமது சூழலை ஒத்த தேசங்களின் அனுபவங்களுடன் மட்டும்தான் நாம் ஒப்புநோக்க முடியும். எமது பாடத் திட்டங்களிலுள்ள, மேலைத் தேயமைய சிந்தனைகளைக் கொண்ட பாடப் புத்தகங்கள் இவற்றை எமக்குச் சொல்லித்தராது.

போரும் இத்தகைய குழந்தைப் படைப்புக்களும் எமது குழந்தைகளில் வளர்த்துள்ள ஆளுமையை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம் என்று நினைக்கிறேன். ஏ-9 பாதை திறக்கப்பட்டு, ஊடகவியலாளர்கள் வன்னிக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டபோது ஏராளமான ஊடகவியலாளர்கள் வன்னிக்குப் படையெடுத்தனர். ஊடகங்களுக்குத் தீனிபோட வன்னி பல செய்திகளை வைத்துக் கொண்டு காத்திருந்த காலம் அது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், வன்னிக்கு விஜயம் செய்த சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் முறுகண்டியில் ஓய்வெடுக்க இறங்கிய ஒரு சந்தர்ப்பத்தில், அங்கே கூடியிருந்தவர்களிடம் சமாதான முயற்சிகள் பற்றிய அபிப்பிராயங்களை அறுவடை செய்து கொண்டிருந்தார்.

இந்த ஊடகவியலாளரது கவனம், ஒரு ஓரத்தில் நின்றிருந்த சிறுவர் குழாம் ஒன்றின்மீது திரும்பியது. 10-12 வயது மதிக்கத்தக்க சிறுவர்களின் குழுவொன்று, இவ்வளவு கால மும் இல்லாமல் திடீரென இன்று தம்மைப் பார்க்கப் படையெடுத்துக் கொண்டிருக்கும் இந்த ஊடகவியலாளர்களை வியப்பு மேலிடும் கண்களுடன் நோக்கிக் கொண்டிருந்தது. இவர் அவர்களிடம் செல்கிறார். வழமையான அந்த உப்புச்சப்பற்ற கேள்வி. "இந்தச் சமாதான முயற்சி பற்றி நீங்கள் என்ன நினைக்கி றீர்கள்?". சிறுவன் ஒருவன் தயங்காமல் பதிலளித்தான்.

இப்ப பாதையைத் திறந்து நீங்கள் எல்லாம் இங்கை வந்தாப்போல எங்களுக்குச் சமாதானம் வந்திட்டுது என்று சொல்லேலாது.எங்களுக்குத் தேவை இது இல்ல. நிரந்தரமான சமாதானம்"இவை அவன் சொன்னவற்றுள் சில. இவ்வளவு காலமும் நீங்கள் எல்லாம் எங்கே போனீர்கள் என்ற கேள்வி அந்தச் சிறுவனின் கேள்வியில் தொக்கிநின்றதாக நான் உணர்ந்தேன்.

நம்பமுடியாமல் இருக்கலாம். கற்பனைபோல் தெரியலாம்.ஆனால் உண்மை. கண்ணால் கண்டது. பெடியன் சொன்னதை ஆங்கிலத்தில் அந்தச்சர்வதேச ஊடகவியலாளருக்கு சகதமிழ் ஊடகவியலாளர் ஒருவர் விளக்கியபோது, அவர் திகைத்துப் போனார். வன்னியின் வாழ்வை, வாழ்வுக்கான போராட்டத்தை வியாபாரமாக்க வந்திருக்கும் தம்மைப் போன்றவர்களுக்குக் கிடைத்த ஒரு சாட்டையடியாக அவர் இதனை நினைத்திருக்கலாம்.

அன்றாட வாழ்வில் நித்தம் போரையும்,அவலங்களையும் சந்தித்த அந்தச் பிஞ்சுச் சிறார்களிடமிருந்து இந்த அனுபவவரிகள் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?. இந்தியாவிலோ, அமெரிக்காவிலோ ஒரு வயதில் குறைந்த சிறுவன் கல்வியிலோ, விளையாட்டிலோ பெரியவர்களுக்கு நிகரான ஒரு சாதனை படைக்கும் போது,அதனைப் போற்றிப் பாராட்டி, பத்திரிகைகளில் படங்களுடன் செய்தியாக்கி வியக்கும் எமக்கு, எமது இந்தச் சிறார்களின் அனுபவ வார்த்தைகள் மட்டும் நம்ப முடியாமல் இருக்கவேண்டியதில்லை. ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டது போல, இது அவனைச் சுற்றியிருந்த சூழல் அவனுக்குக் கற்றுத்தந்த பாடம்.

சரி,இப்போது போர் ஓய்ந்துவிட்டது. (இது நிரந்தரமானதா என்கின்ற சந்தேகங்கள் இன்னமும் நீங்கா விட்டாலும்) நமது சிறார்களுக்கு ஏன் இந்தக் கொடிய அனுபவங்களைச் சொல்லி அவர்களுடைய மனதைக்

**றுஷாங்கன்**

கஷ்டப்படுத்தவேண்டும் என்று கேட்கலாம்அதற்கும் திரு.யோகநாதன் அழகாகப் பதில் தந்தார்." எங்களுடைய குழந்தைகள் சிறுவயதிலேயே, தமிழர்கள் இந்தக் காலப் பகுதியில் அனுபவித்தவற்றை,செய்த போராட்டங்களை,அதற்குக் கொடுத்த விலைகளை அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலச் சந்ததி,ஒரு வீரம் நிறைந்த சந்ததியாக உருவாகும்" என்று வாதிடுகிறார் அவர்.நியாயமான கருத்துத் தானே. இந்தப் போர்ச்சூழல் எமக்குத் தந்த பாடத்தை நாம் வரலாறாக எமது சந்ததிக்குக் கொடுப்பது அவசியம் தானே. அப்போதான் அவர்கள் இந்த 'மண்ணின் மைந்தர்களாக' வளர்வார்கள்.

இவை இன்னும் தோன்ற வேண்டிய, போர் இலக்கியங்கள், குழந்தை இலக்கியங்கள் பற்றி கூடலில் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள். ஆனாலும்,இந்தப் போராட்ட காலத்தில் கலைஞர்கள் சும்மா இருந்துவிடவில்லை. போராட்டத்துடன் இணைந்து கலையும் தன்னை வளர்த்துக் கொள்ளவே செய்தது. தமிழர்களின் உயிர்வாழ்வுக்கான போராட்டமாக இருந்த இந்தப் போராட்டத்துக்குச் செய்யவேண்டிய பங்களிப்பை கலை,இலக்கியங்களும் செய்தே வந்துள்ளன. இவைபற்றியும் கூடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.ஆனால் இந்தக் கலை இலக்கியப் படைப்புக் களின் 'தரம்' பற்றியும் அங்கே கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

(இன்னும் வரும்...)

## உள்ளத்தை உறுத்துபவை

**ஓமந்தைச்** சோதனைச் சாவடியிலிருந்து வவுனியா நோக்கிப் போகத் தயாராக இருந்த பேருந்துக்குள் நடமாடும் ஒரு சிறுவியாபாரி தனது வியாபார நோக்கமாக ஏறினார்.

வன்னியிலிருந்து சென்ற பிரயாணிகளால் அந்த பேருந்து நிறைந்து போயிருந்தது.

நடமாடும் வியாபாரி தனது கைகளில் பெண்கள் கால்களில் அணியும் காற்சங்கிலி, மற்றும் மெட்டி என்பவற்றை வைத்துக்கொண்டு ஒவ்வொரு பிரயாணியாக தனது பொருட்களை விற்று விட அவற்றை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்.

பேருந்தின் கடைசி ஆசனத்தில் அமர்ந்திருந்த படித்த அல்லது படித்ததாக பாவனை காட்டிக் கொள்ளும் மனிதரிடம் நெருங்கிய வியாபாரி தனது பொருட்களை விற்பதற்கான விளம்பரத்தை கூவினார்.

வியாபாரியை நோக்கி அந்த பெரிய மனிதர் ஏய் உது வெறும் அலுமினியம் ஏமாற்றவா பார்க்கிறாய் என்றார்.

எதுவுமே பேசாத வியாபாரி தனது பொருட்களை வாங்கும்படி மீண்டும் கூறினான்.

மீண்டும் அந்த பெரிய மனிதர் உந்த அலுமினியத்தை விற்கப் பார்க்கிறார்கள். உதை யாரும் வாங்குவினமோ என பெரிய சத்தமாகக் கத்தினார்.

பொறுமையை இழந்த வியாபாரி அந்த மனிதரை சவாலுக்கு இழுத்தார்.

உமக்கு உது அலுமினியம் என்று தெரியுமோ என்றார். உடனே பெரிய மனிதர் உது செப்பும் அலுமினியமும் கலந்து செய்திருக்கு என்றார்.

அதோடு அலுமினியம் என்றால் என்ன செப்பு என்றால் என்ன? சில்வர் என்றால் என்ன? என பிழை பிழையாக வியாக்கியானம் புரிந்து கொண்டிருந்ததோடு மட்டுமன்று அந்த சிறுவியாபாரியின் தொழிலை கேலி செய்யும் நோக்கில் உரத்துப் பேசினார்.

வியாபாரிக்கு தன் தொழிலை கேலி செய்வதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை அவரது அங்கமெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெரிய மனிதர் பொருட்கள் தொடர்பாக கூறியவற்றை நிரூபிக்க வருமாறு அழைத்தார்.

இவரோ அந்த வியாபாரியை கேலி செய்வதிலேயே குறியாக இருந்தார்.

வியாபாரி உமக்கு விருப்பம் என்றால் வாங்கும் இல்லாவிட்டால் நீர் பேசாமல் இரும் அதைவிடுத்து தேவையற்ற கதைகளை கதைத்து எனது தொழிலை ஏளனம் செய்ய வேண்டாம் என்றார்.

ஆனால் பெரிய மனிதர் வியாபாரியை மடக்கி விட்டதாக நினைத்து சிரித்தபடி தனது வெற்றியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முயற்சித்தார்.

செய்யும் தொழிலே தெய்வம் அந்த தொழிலை கேலி செய்து விட்டார் என்ற ஆதங்கத்தில் தமிழில் உள்ள ஆகக் கூடிய கெட்ட வார்த்தைகளால் பெரிய மனிதரை பேருந்தே நடுங்கும் படி திட்டு திட்டு என திட்டியும் ஆத்திரம் அடங்காமல் எதுவுமே பேசமுடியாமல் நின்றார்.

இப்போது பேருந்து முழுவதும் அந்த பெரிய மனிதரைத் திட்டத் தொடங்கிவிட்டது.


வியாபாரிக்கு தனக்கு ஒரு நியாயம் கிடைத்து விட்டது என்ற சிறு அமைதியோடு அருகிலிருந்த கடையில் வாங்கி வைத்திருந்த சிகரெட் ஒன்றை புகைத்து புகை புகையாய் தனது கோபங்களை வெளியேற்றிக் கொண்டிருந்தார்.

அளவுக்கு மீறி அதிகமாக மற்றவர் சுதந்திரத்தில் தலையிட முயன்ற பெரியமனிதர் அவமானத்தால் குன்றிப் போய் இருந்தார்.

உண்மையில் ஏய்த்துப் பிழைக்கும் மனிதரைவிட உழைத்துப் பிழைக்கும் அந்த வியாபாரி மேலானவன் அல்லவா. அவனது தொழிலை ஏளனம் செய்ய முயன்றது தவறல்லவா...? அன்றுதான் பார்த்தேன் சாது கோபம் கொண்டால் காடு கொள்ளாது என்பதை.

வேழினி

மிகையான சொற்களில் வெளிப்படுத்தினால், உன் சிந்தனையே, மூச்சுத் திணறி விடும். -ஃபிராங்க்ளார்க்



## சிறுகதை

# இறுதி முத்தம்





என்றும் போலவே அன்றும் அதிகாலை எழுந்த சங்கீதன் தனது காலைக்கடனை முடித்துக்கொண்டு கையில் பூக்களுடன் தனது அறை நோக்கி சென்று கொண்டிருந்தான். "மச்சான், நீதான் கூட்டுமுறை வேளைக்கு வா" இது அவனது நண்பன் வண்ணத்தின் குரல். "கொஞ்சம் பொறு தாத்தான்ர படத்துக்கு பூ வச்சுப் போட்டு வாறன்" என்றவாறு தனது அறையினுள் சென்று சபேசன் அண்ணையின் படத்துக்கு பூ வைத்துவிட்டு வெளியே வந்த சங்கீதன் விளக்குமாறைக் கையில் எடுத்து கூட்ட ஆரம்பித்தான். அது ஒரு கரும் புலிகள் வாழும் பாசறை. அங்கு வீசும் தென்றல் கூட மிகவும் மென்மையாகவே கடந்து செல்லும். அங்கு குயில்கள் கூட தோற்றுவிடும். அந்தளவுக்கு மகிழ்ச்சி வெள்ளம் அலை புரண்டோடும். அதிகாலையிலேயே தமது கடமைகளை முடித்துக் கொண்டு பயிற்சிக்கு ஆயத்தமானார்கள் அந்த பசுமை நிறைந்த இதயங்கள். ஆசிரியரின் வாயில் இருந்த விசில் "விரைவில் வாருங் கள்" என்பது போல் இரண்டு முறை அலறியது. அணிகள் பயிற்சிக்காக தயாராகின. அனைவரும் குறிப்பிட்ட பயிற்சிகளை உரிய நேரத்தில் செய்து முடித்ததால் அன்று பயிற்சி மதியம் 12.00 மணியுடன் நிறுத்தப்பட்டு அனைவரையும் கொட்டிலுக்கு அனுப்பினார். கொட்டிலுக்கு வந்த சங்கீதன் தனதுசட்டைப்பையினுள் இருந்து ஏதோ ஒரு பார்சலை எடுத்து முத்தமிட்டதையும் இதே செயலை இவன் முன்பும் செய்ததையும் நன்றாகவே நோட்டமிட்டிருந்தான் வண்ணம். அன்று வழமாக மாட்டிக் கொண்ட சங்கீதனிடம் "டேய் சங்கீதா, என்னடா அது நானும் பாக்கிறன். அடிக்கடி இந்த பார்சலை எடுத்து அதுக்கு முத்தம் கொடுக்கிறாய். என்னைக் கண்டவுடன் ஒளிக்கிறாய். அதுக்க என்ன இருக்குடா? சொல்ல மாட்டியா?" என்ற கண்டிப்பு கலந்த கெஞ்சலுடன் கேட்டான் வண்ணம். "நான் உனக்கு கட்டாயம் சொல்லுவன். உனக்கு சொல்லாம நான் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை. ஆனா இப்ப சொல்ல மாட்டன் அதுக்கெண்டு ஒருநாள் வரும். அப்போ கட்டாயம் சொல்லுவன்." என்ற சங்கீதனை வண்ணம் விடுவதாக இல்லை. "இல்லை எனக்கு இப்ப சொல்லவேண்டும். உடனேயே காட்ட வேண்டும். காட்டு." என்று அடம்பிடித்த வண்ணத்தின் வலது கன்னத்தில் ஓங்கி விழுந்தது இடது கரம். பஞ்சு இரும்பாகாது என்று நம்பி இருந்த கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்தது. என்றும் அணைக்கும் அந்த கரம் அன்று மட்டும் அறையும் என்பதை எதிர்பாராத கண்கள் நீர் இறைக்க தாங்க முடியாத வேதனையுடன் அவ்விடம் இருந்து அகன்றான். தன் அன்புச் சகோதரனுக்கு கை நீட்டி அடித்து விட்டேனே என்று தாங்க முடியாத மன வேதனையோடு செய்வதறியாது திகைத்து நின்றான் அந்த இளம் வீரன்.

இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். இவர்கள் தான் "கல்லுக்குள்ளே ஈரம் உண்டு கசிவதும் உண்டு. கரும்புலிகள் விழிகளில் நீர் வழிவதும் உண்டு"

விழியோரம் நீர்வழிய செய்வதறியாது நின்ற சங்கீதனின் தோள் மூட்டில் கம்பீரமான கையொன்று விழுந்தது.

"டேய் சங்கீதன் என்னடா சிதம்பர சக்கரத்தை பேய் பாத்த மாதிரி நிக்கிறாய். உனக்கொரு குட் நியூசடா" "எனக்கு சந்தோசமா? என் சந்தோசத்துக்கு சாவு மணி அடிச்சு கன நாளாச்சுடா. எனக்கெண்டொரு சந்தோசம் இருக்காது, குட்நியூசும் இருக்காது." "டேய் வாற வியாழக் கிழமை நம்ம தாத்தா வீரச்சாவடைந்து 2 வருசமல்லோ? இது சம்பந்தமா அண்டைக்கு கதைக்கேக்க ரமேஸ் அண்ணா ஒண்டு சொன்னார் தெரியுமா? அது போலக் கிடக்கு. உன்ன ரமேஸ் அண்ணா வரட்டாம். போனால் தெரியும் தானே." "சரி போ வாறன்" தனது உயிர் நண்பன் வண்ணத்தின் கன்னத்தில் அடித்த நினைவு மனதை உருக்கும் சம்பவத்தை தாங்கியவாறு தளபதியின் இருப்பிடம் நோக்கிச் சென்றான். தளபதியைக் கண்ட சங்கீதன் "வணக்கம் அண்ணா" என்றான். பதிலுக்கு வணக்கம் செலுத்திய தளபதி அருகில் இருந்த நாற்காலியில் அமரும்படி கூறினார். அருகில் அமர்ந்த போது "தம்பி நேற்று அண்ணையோட கதைச்சனான். எதிர்வரும் வியாழக்கிழமை சுபேசனுடைய 2ஆம் ஆண்டு நினைவு நாள் வருகுது. அதுக்கான ஒரு நினைவூட்டல் தாக்குதலை செய்ய நாங்கள் திட்டமிட்டிருக்கிறம். அதுக்கான சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கு. தாக்குதல் தொடர்பாக நான் ஆறுதலா கதைக்கிறன். நாளைக்கு உங்க ளுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட இருக்குது. பயிற்சி வேற இடத்தில நடக்க இருக்கிறதால நீங்கள் இண்டைக்கு பின்நேரம் வெளிக் கிடலாம். 4 நாள் பயிற்சிக்குப் பிறகு உங்களுடைய தாக்குதல் நகர்வு ஆரம்பமாகும். போய் வெளிக்கிடுங்கோ. பின்னேரம் கொண்டு போய் விட்லாம் என்று கூறிமுடித்த தளபதி அன்று மாலையே சங்கீதனை பயிற்சிக்கு அனுப்பினார். நாட்கள் வேகமாக நகர்ந்தன. கடும் பயிற்சி முடித்து முகாம் வந்த சங்கீதன் மறுநாள் இலக்கு நோக்கி நகரப் போகிறான். இது எல்லாக் கரும்புலி வீரர்களின் மனங்களிலும் பசுமரத் தாணி போல் பதிந்து விட்ட சம்பவம்.

மறு நாள் அதிகாலை ஆதவன் தனது கதிர்களை அள்ளி வீசியவாறு கிழக்கில் உதயமானான். தமிழ்த் தாய் நாட்காட்டி சுபேசண்ணையின் படத்தைத் தாங்கி வியாழன் என்பதைக் காட்டி நின்றது. அன்றும் வழமையான செயற்பாடுகளுடன் சட்டைப் பையில் இருந்த பார்சலை எடுத்துஇறுதி முத்தங்களைக் கொடுத்தான். பின் விளக்குமாறும் கையுமாய் முற்றத்தில் நடந்து கொண்டு "அடைக்கலம் தந்த வீடுகளே போய் வருகின்றோம் நன்றி" என்ற பாடல் வரிகளை மீட்டவனாக கூட்ட ஆரம்பித்தான். ஏனைய தோழர்களோ நாளை காற்றோடு கரையவிருக்கும் அந்த

ச.நிரோஜன்

கந்தகப்பூவை கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டே நின்றனர். அவ்வப்போது அவர்களது கண்கள் நீர் வடிக்கத்தவறவில்லை.

திடீரென தனது தோளை ஒரு கரம் ஆக்கிரமிப்பதை உணர்ந்து திரும்பினான். "அண்ண தாங்க நான் கூட்டுறன்" என்ற சின்னவனின் கேள்விக்கணைக்கு "சின்னவா இவ்வளவு காலமும் எத்தனை தரம் நான் எனது பூமித் தாயை மிதித்திருப்பேன்? அந்தத் தாய் என்னைத் தாங்கி இருந்த நாட்கள் எத்தனை? அந்த தாய்க்கு நான் செலுத்தும் கடசி நன்றிக்கடன் இதுதான். என்னை என் தாய்க்கு நன்றி செலுத்த விடு" என்றான். கண்களில் நீர் ததும்ப அவ்விடம் இருந்து சென்றவனை "சின்னவா எல்லாரையும் ஒருக்கா கிளாஸ் கொட்டிலுக்க வரச் சொல்லி விடு" என்ற சங்கீதன் தனது அறை நோக்கிச் சென்றான். தனது அன்புச் சகோதரன் இறுதியில் விடைபெறும் நேரத்திலும் என்ன கூறப்போகிறான் என்ற ஏக்கத்தோடு கிளாஸ் கொட்டிலில் தமது சிரங்களை தொங்க விட்டவாறு கண்களை கங்கை நதியாக்கி தேசப் புயலின் வருகைக்காய் காத்திருந்தனர். இந்த கரு வேங்கைக் குழந்தைகள். தலை நிமிர்ந்த வேங்கைகளை மீண்டும் தலை குனிந்து அழ வைத்தது அந்த அபூர்வக் காட்சி. தோள்களில் உடமைகளுடன் தனது தோழர்களை நெருங்கி வந்தான். அவனது முகத்தில் என்று மில்லாத சந்தோசம். ஆனால் மற்றவர் முகங்களில் ஈ ஆடாக் காட்சி. உடமைகளை ஞாபகச் சின்னமாக்கிட அருகில் வருகிறான் அந்த அக்கினிக் குழந்தை. வாய்கள் பதறுகின்றன. வார்த்தைகள் வர மறுக்கின்றது. கட்டி அணைத்து முத்தமிட்டு தன் உடமைகளை தோழர்களின் தோள்களில் சாத்தியவாறு நகர்கிறான் அந்த பிரியாவிடை நாயகன். அடுத்து வருவது அன்புத் தோழன் வண்ணத்தின் பால்முகம். ஆனால் தோளில் சாற்றுவதற்கு அவனிடம் எதுவுமே இல்லை. எல்லாமே கொடுத்தாகிவிட்டது. இருவரது கண்களும் ஒன்றை ஒன்று சங்கமிக்கின்றது. அதன் அர்த்தங்களை யாராலும் உணர முடியவில்லை. கட்டி அணைத்து முத்தமிட்டார்கள். கண்களில் நீர் கசிந்தது. மற்றைய போராளிகளோ வெவ்வேறு திசைகளில் சென்று மரங்களோடு மௌனமாக உரையாடினர்.

சட்டைப்பையினுள் புகுந்த கை விரல்கள் திரும்பி வரும்போது அந்த அழகிய பார்சலுடன் வந்தது. அதை வண்ணத்திடம் நீட்டினான். அதே பார்சல், அதே நிறக் கடதாசி, ஆதே அளவு, அன்று எனக்கு அடிவிழக் காரணமாக இருந்த அதே பார்சல். மனதுக்குள் சிந்தித்த வண்ணம் "இது எனக்கு வேண்டாம். இதுதான் எங்கட உறவையே முறித்தது. இது எனக்கு வேண்டாம்." என்று வெறுப்புடன் கூறினான். "இல்ல வண்ணம் இந்த பார்சல் உன்ர கையில ஒப்படைக்கிற நாள் வந்திற்று. இது இனி எனக்கு ரியதில்ல. இது உனக்குரியதுதான். நீதான் இத கவனமா பாத்துக் கோணும்" இதுக்க என்ன இருக்குது எண்டுசொல்ல மாட்டியோ என்று வெகு நாளா கஸ்ரப்பட்டியே. இப்ப சொல்லுறன் கேட்டுக்கோ.

வண்ணம் என்ர ஊரில நானும் என்ர குடும்பமும் நல்ல சந்தோசமாத்தான் வாழ்ந்தம். ஒரு நாள் எங்கட ஊர இராணுவ வெறிநாய்கள் சுற்றி வளைச்சுது. ஒவ்வொரு வீடுவீடாக "கொட்டி கொட்டி" என்றவாறு கைக்கு கிடைத்தவர்களை வெட்டி, கொத்தி எறிந்தனர். இந்த முறை எமது வீட்டுக்கும் வந்து விட்டான். நானும் தங்கச்சியும் வீட்டுக்குள்ள இருந்தோம்." என்றவனை இடைமறித்த வண்ணம் "டேய் உனக்கு தங்கச்சி இல்லை எண்டல்லா சொன்னனி. இப்ப தங்கச்சி என்கிறாய்." "ஆமாண்டா வண்ணம் நான் உனக்கு பொய்தாண்டா சொன்னன். மன்னிச்சுக்கோ." திடீரென எங்கட முத்தத்திலயும் சிங்களக் காடையரின் கர்ச்சிப்புக் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தோம். எனது ஆசை அப்பாவும் பத்து மாதம் என்னை சுமந்து பெற்ற அம்மாவும் ரத்த நதியில் நீராடினர். அம்மா.... அப்பா..... என அழுது புலம்பக் கூட சுதந்திரம் அற்று தூக்கி வளர்த்த அன்னை தந்தையின் உடலைக்கூட பார்க்க முடியாமல் தப்பி ஓடினோம். நாம் ஓடியதைக் கண்டுவிட்ட காடையனின் துப்பாக்கிக் குண்டொன்று என் அன்புத்தங்கை யின் கால்களை பதம் பார்க்கவே "என்ர அண்ணா"என அலறி விழுந்தாள். அவளையும் விட்டுப் போகஎன் மனம் இடமளிக்காததால் இழுத்துக் கொண்டே ஓடினேன். காடு, மேடு, சகதிகள் தாண்டி எங்கோ ஓர் ஊர் புகுந்தோம்.

அன்று தொட்டு கால் ஏலாத என் தங்கைக்காக பிச்சை எடுக்க தெருவில் இறங்கியது என் கால்கள். நாளுக்கு நாள் என் 08 வயது தங்கை என்னைக் கேட்பாள் "அண்ணா எங்கட அம்மா, அப்பா எல்லாரும் எங்கண்ணா? எப்பண்ணா எனக்கு ஒழுங்கான சாப்பாடு தருவாய்? என்றெல்லாம் அழுது புலம்புவாள். அப்ப எனக்கு வயது 12. போராடுறதுக்கு புத்தியில்ல. தட்டிக் கேட்க சக்தியில்ல. சாகோனுமென்று நினைச்சன். என்ர தங்கச்சியின்ர வாழ்க்கை விடல. இந்த இரண்டுக்கும் நடுவில எனக்கொரு வாழ்க்கை தேவைப்பட்டிச்சு. அதனால தான் என்ர கால்கள் தெருவில இறங்கிச்சு.

ஒருநாள் சாப்பாடு கேட்டதுக்காக ஒருத்தர் என்ன உதைச்சுத் தள்ளினார். அத என்ர ஆசைத் தங்கச்சி ரஜிதா பாத்திட்டா. அதுக்குப் பிறகு அவ என்னட்ட சாப்பாடே கேக்கிற இல்லடா. இருந்தாலும் என்ர தங்கச்சிக்கு ஒருநாளைக்கு ஒருநேர உணவாவது கொடுக்க நான் தவறேலடா. ஒருநாள் முழுக்க எங்களுக்கு சாப்பாடே இல்ல. 08 வயது தங்கச்சி தாங்குவளா? அடுத்த நாள் என்ர தங்கச்சிய ஒரு பிள்ளையார் கோவிலடியில இருக்க விட்டுவிட்டு உணவு தேட வெளிக்கிட்டன். அப்பதான் என்ர தங்கச்சி சொன்னா "அண்ணா இண்டைக்காவது எனக்கு நல்ல சாப்பாடு வேண்டிவாண்ணா" என்றவள் தனது கையில் கிடந்த பூச்சுக்கள் கூட அழிந்து போன அந்த பித்தளைக்காப்பைக் கழட்டி என் கரத்தில் தந்தவள் கூறினாள் "அண்ணா இந்தக் காப்பை வித்துப் போட்டாவது எனக்கு சாப்பாடு வேண்டிவாண்ணா" என்றாள். "இந்த பித்தளைக் காப்பை என்னதான் செய்வது?" மனதில் சிந்தித்து விட்டு சட்டைப்பையினுள் போட்டுக் கொண்டு உணவு தேட தெருவில் இறங்கினேன்.

வெகுதூரம் சென்ற நான் ஒரு எஜமானின் வீட்டில் உணவு கேட்டேன். தந்தார். பேசாத பேச்சுக்களின் பின் கொஞ்சம் மீதிச் சாப்பாடு தந்தார். கிடைத்த சந்தோசத்தில் என் தங்கச்சிக்கு உணவு கொடுத்து விட வேண்டும் என்ற ஏக்கத்தோடு ஓடோடி வந்தேன். திடீரென என் காதுகளை பேரிரைச்சல் பிளந்தது. நிமிர்ந்து பார்த்த போது இயந்திர கழுகுகள் இரண்டு குண்டுகளைப் போட்டு விட்டு எழுந்தது. பிள்ளையார் கோவில் பக்கம் ஒரே புகை மண்டலம். கால்கள் வேகமெடுத்தன. ஆனால் நிதானம் இழந்தன. வாய்கள் ஊமையாயின. ஓடோடிச் சென்றேன். என் தங்கைக்கு ஏதும் நடந்திருக்குமோ என்ற ஏக்கத்தோடு ஓடினேன். எதுவுமே நடக்கவில்லை. தூரத்தி

லேயே எனது தங்கை படுத்திருப்பதை கண்டுகொண்டேன். என் மனதில் சந்தோசம் பெருக்கெடுத்தது. அது நீடிக்கவில்லை. கொண்டு சென்ற உணவை ஊட்டுவதற்காக என் தங்கையை எழுப்பினேன். எழும்பவில்லை. ஒருபிடி உணவு உண்ணுமாறு வேண்டினேன். அவள் வாய், கண் அனைத்தையும் மூடி விட்டாள். நிரந்தரமாகவே மூடி விட்டாள். எனி என்னுடன் கதைக்கவே மாட்டாள். அண்டைக்கு அவள் தந்த காப்புத்தான்ரா இந்த பார்சலுக்க இருக்குது.

அதே முகம், என் மடியில் புதைந்த முகம், என் உள்ளங்கைகளில் ஏந்திய முகம், நான் முத்தமிட்ட அந்த அழகிய முகம், தினமும் என் கண்களில் பவனிவரும் அந்த மதிமுகம், எனது இருப்புக்கும் இறப்புக்கும் இடையில் இருக்கும் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் அதே முகம். அன்றைய நாட்களை நினைவுபடுத்தும் அந்த பால்முகம், அந்த முகம் தான் இந்த காப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் என் தங்கச்சியின் இனிய முகம்.

"இந்தா மச்சான் இத எனி கவனமா வச்சிருக்க வேண்டியது உன்ர பொறுப்பு. அண்டைக்கு உனக்கு கை நீட்டி அடிச்சுப் போட்டன். அதுக்கு மன்னிச்சுக்கோ." "இல்ல நீதான் என்ன மன்னிக்கோணும். உன்ர மனச புரிஞ்சு கொள்ளாம நடந்திற்றன். அதுக்காக மன்னிச்சுக்கோ."

வண்ணம். இதுவரை காலத்திலயும் நான் தனிமையில இருந்தேனே தவிர ஒருநாளும் தனியா இருக்கேல. மனசுக்குள்ள இருக்கிற அவளோட பேசிக்கிட்டு, அழுதுகிட்டு அவளோட வாழ்றதா ஒரு கற்பனைச் சுகத்தோட இவ்வளவு காலத்தையும் கழிச்சிட்டன். நீயும் இலக்கு நோக்கி வெளிக்கிடேக்க என்ர தங்கச்சிய தவிக்க விட்டிடாம இன்னொரு அண்ணனிட்ட கொடுத்துப் போட்டு வா. "காப்புக்குள்ள வாழ்ற என்ர தங்கச்சி கவனம்" என்று கூறி வண்ணத்தின் கைகளில் தனது தங்கச்சியை ஒப்படைத்தவன் தனது இலக்கு நோக்கிய நகர்வுக்காக இரண்டு அடி எடுத்து வைத்தான். அப்போது.....அந்த காடே அதிரும் வண்ணம் அந்த ஒலி வானைப் பிளந்தது. சங்கீதன்................

திரும்பிய அவனது கண்களுக்குள் அந்த மெய் சிலிர்க்கும் காட்சி படர்ந்தது. அந்த பாசறைக் குழந்தைகள் தன் நண்பனுக்கு இறுதி உணவூட்ட உணவுத் தட்டுக்களுடன் காத்திருந்தனர்.

நாளை எம்மையும் எம் மண்ணையும் விட்டுச் செல்லவுள்ள அந்த வேங்கைக்கு இறுதி உணவூட்டினர். பதிலுக்கு சங்கீதனும் உணவூட்டினான். வண்ணமும் உணவூட்ட நினைத்தான். ஆனால் உண வுத் தட்டு எகிறி விழுந்தது. தன் நண்பனிடம் இறுதி உணவை உண்டபின் அவர்களின் கண்களிலும், இதயங்களிலும் இருந்து விடை பெற்றுச் சென்றது அந்த கந்தகக் காற்று.

காட்டு மரங்களும், வண்டினங்களும் அவனது வெற்றிப் பாதையில் நின்று வாத்திய கீதமிசைத்து வழியனுப்பின. உடலில் கனத்துடனும், உள்ளத்தில் உறுதியுடனும், தன் அன்புத் தங்கையின் நினைவலைகளுடனும் இலக்கு நோக்கி நகர்ந்தான் அந்தத் தேசப்புயல். நள்ளிரவு 12.00 மணி. எங்கோ ஒலித் தது அந்தப் பெரும் வெடிச் சத்தம். அது தான் மண்ணுக்கு சங்கீதன் கொடுத்த இறுதி முத்தம்.

☆



## அலை

வானம் நீலம்
கடலும் நீலம்
நீ
பார்த்துக்கொண்டேயிருக்கிறாய்
இரண்டும்
முத்தமிட்டுக்கொண்டேயிருக்கின்றன.

கடல்
மோதித்து மோதித்து
வானத்தைத் தழுவுகிறது
அதன் இன்பம் பெருகி
அலை அலையாக நுரைக்கிறது.

வானமோ
முத்தமிட்டுக்
கொண்டேயிருக்கிறது
நேரமின்றி
காலமின்றி
காதலோடும் கனிவோடும்
நீ
பார்த்துக்கொண்டேயிருக்கிறாய்
ஆனாலவை
தொட்டுக்கொள்ளத்
தவித்துக்
கொண்டேயிருக்கின்றன
உன்னையும் என்னையும்
போல.

கருணாகரன்



## நட்டுவிடு நல்ல மரமாய்...

உரமிட்டு வளமாக்கி
உழைத்தவர் இறந்தாலும்
அவர்
தொட்டு நட்டது
இட்ட கனி- பறிப்பான்
வாரிசு
கனிபறிக்கும் கரங்கள்-உன்
கரம்பற்றிப் பாடும்
ஆகவே
நடு பனை தென்னை-உன்
நாலுவேலியெல்லாம்

நித்தம் நீரூற்று-உன்
முத்தம் செழிக்கட்டும்

மடியிலுள்ள மழலை புசிக்க
மனமாய் வையப்பா மரம்தனை

எழுவது வயதிலும்
ஏழுமுறை விழுந்தாலும்
ஒருமுறை நட்டு விடு
ஓரிரண்டு மரமாவது


த.ஜெனி நெல்சன் (உயர்தரம்)
மல்லாவி மத்திய கல்லூரி



## சூரிய வருகைக்காய் ஏங்குகிற தாமரை

சூரியனின் வருகைக்காய்
காத்திருக்கும் தாமரையாய்
என் உள்ளம்
ஏதோ ஒன்றிற்காய்
காத்துக் கிடக்கிறது
காலம் காலமாய்
தவம் கிடக்கிறேன்.
இன்னும் அது எனக்குத்
தெரியவில்லை
இன்று கிடைக்குமா?
நாளை கிடைக்குமா?
எப்போதாவது கிடைக்குமா?
ஏங்கியபடியே வாழ்கின்றேன்.
அது
நிச்சயம் கிடைத்துவிடும்
இரு வழியில்
ஏதோ ஓர் வழியில்
வெகுவிரைவில்
அது கிடைத்துவிடும்
அந்த நம்பிக்கை
ஆழ் மனதில் உள்ளதால்
சூரியனை எதிர்பார்க்கும்
தாமரையாய் நான்.

யோ.புரட்சி



## மறந்துவிடாதே

கூ...கூ...கூ .........குயிலே
ஏனிப்படி குரலெடுத்துக்
கூவுகின்றாய்?
ஓ....புரிகின்றது.
கூவி வருகின்ற
எறிகணையின் ஓசைகள்
நின்றுவிட்டதால்- இவ்வாறு
கூவுகின்றாயா?
இல்லையேல்
எம்பிள்ளைகளை
பயங்கரவதிகள் என்று
பட்டம் சூட்டி
கொட்டமடித்தவர்கள்
இன்றதனை மறந்துவிட்டு
படியிறங்கி வந்ததனை எண்ணிக்
கூவுகின்றாயா?
குயிலே............
யார் எதை மறந்தாலும்
வாழவேண்டிய வயதில் -
வாழ்வின்
வசந்தங்களையெல்லாம் துறந்து
எம்மண்ணில் விடிவிற்காய்
விதையானவரின்
பாதையை ஒருபோதும்- நீ
மறந்துவிடாதே

ஏழாலையூர் எழில்

## உருவகக்கதையும் இருகவிதைகளும்



## அத்திவாரக் கற்கள்

வீடு கட்டி முடிந்தாயிற்று

அதன் நோத்தியான வடிவமைப்பு, அலங்காரவளைவுகள், சிற்பவேலைகள் பொருத்தமான இடங்களுக்கேற்றால் போல் பூசப்பட்ட வர்ணங்கள் என, எல்லாமே சேர்ந்து மிகவும் லாவண்யம் மிக்க பேரழகான வீடாய் மிளிர்ந்தது அந்த வீடு.

அவ் வீட்டின் அழகில் மயங்காதவரும், கதைக்காதவர்களும் எவருமிலர்.

" மழையில் நனைந்து அசிங்கப் படாமலும், வெயிலில் காய்ந்து வெளுறாமலும் உனதழகை நான் தானே பாதுகாத்து வருகின்றேன். மழைக்காலத்தில் என்னில் சிறு வெடிப்பு ஏற்பட்டால் கூடஉனது அழகு அதோகதிதான் என்றது கூரைத்தகடு."

"என்னில் உன்னை வைத்துப் பூட்டாது போனால் நீ கீழே விழுந்து நொருங்கி இருப்பாய். என்னோடு ஒட்டியிருந்து கொண்டு பெரிய வெண்ட கதை கதைக்கிறாயே நீயென்று ஒரே குரலில் முறைத்தன பனைஞ் சிலாகைகளும் பனைம ரங்களும்."

ஓ..... உங்களுக்குள் எதற்கு வீணான சர்ச்சை உங்களையெல்லாம் எவ்வளவு சிரமப்பட்டு நான் தாங்கி வைத்திருக்கின்றேன் தெரியுமா? அதோடு விதம் விதமான கலர் கொண்டு பல வகையான ஓவியங்களை என்னில் வரைந்ததனால் தான் இந்த வீடே அழகாயிருக்கிறது.

ஆகவே இந்த வீட்டின் வடிவுக்கு முழுக்க முழுக்க நானே காரணம் என்று பறைசாற்றியது சுவர்.

இவ்வாறாக அங்குள்ள எல்லாக்கட்டிடப் பொருட்களும் அந்த வீட்டின் அழகுக்கு தான் தானே காரணமென்று ஒவ்வொன்றும் தலை கனத்து உரிமை கொண்டாடின.

நீங்கள் கதைத்தவற்றையெல்லாம் நாங்கள் கேட்டுக் கொண்டு தானிருந்தோம் ஏன் உங்களுக்குள் மோதுப்பட்டு முரண் படுகிறீர்கள்.

எங்கெல்லாமோ இருந்த எங்களை சேர்த்தெடுத்து இங்கு கொண்டு வந்து கொட்டினார்கள். இந்த வீட்டின் உயர்ச்சிக்காக ஒன்றாக இணைந்தோம்.

அழுக்கேறி ஊத்தையாக மண்ணுக்குள் புதைந்து கிடக்கிறோம்.


உங்களின் ஒவ்வொரு பாரத்தையும் நாங்களே சுமந்து நிற்கின்றோம்.

அடித்தளம் சரியாக அமையா விட்டால் முடித்தளமும் சரியுமென்று சொல்வார்களே நீவிர் கேள்விப்படவில்லையா?

நாங்கள் பலமாக இல்லையென்றிருந்தால் கட்டும் போதோ, கட்டி முடிந்த பின்போ இடிந்து வீழ்ந்திருக்கலாம் எங்களின் உறுதியான பலத்திலேயே இந்த வீடு நிமிர்ந்து நிற்கிறது.

இனி எக்காலத்திலும் வீழ்ந்து போக நாங்கள் அனுமதியோம் என்று கூறி அமைதியாகின அத்திவாரக்கற்கள். ●

## எனது முற்றத்தில்



தும்பி...
கிழக்குப்பக்கமோ,
தெற்குக்கரைக்கோ போகாத

முத்தத்தில் கால் வைக்காத
கண்டகிண்டபடி,
ஓடியாடிவிளையாடாதயப்பு
அம்மா சொல்றதைக்கேள் ராசா

என்னம்மா நீங்கள்?
முத்தத்திலயும் விளையாட
வேண்டாமென்றியள்,
அப்ப வெளிக்கிடுங்கோ!

மிதிவெடிகள் இல்லாத
இடத்தில எங்காவது போயிருப்பம்.

எங்கயப்பன் போறது?
மிதிவெடிகள் தான
உவடம் முழுக்க,
அறுகு மாதிரி பரவிக்கிடக்குது.

பின்ன ஏனம்மா?
அங்கயிருந்து வந்து எங்கட
முத்தங்கள்ள
மிதிவெடிகள புதைச்சவை?

## விருப்பும் தெரிவும்



I
கூட்டில்
கோழிக்குஞ்சுகள்
நின்மதியாக
நித்திரை கொள்ள வேண்டுமாம்
இரவில்.
II
காகம்
பருந்து,
வல்லூறு,
பூனை,
மரநாய்,
பாம்பு
இவையே காவலுக்கும்
நிற்குமாம்.

ஆவரங்கால் சுதன்

ஒரு செயல் மனதில் பதிவதைப்போல், ஆயிரம் சொற்கள் கூடப் பதிய மாட்டா. -ஹென்றிக் இப்ஸென்




## சிறுவர் கதை

# எல்லாம் நன்மைக்கே

அரசன் ஒருவன் வழமையாக ஒவ்வொரு நாளும் பல தரப்பட்ட கனிகளை கத்தியால் வெட்டி உண்பதுண்டு. வழமை போல் அரசன் ஒரு நாள் காலை கனிகளை வெட்டி உண்டு கொண்டிருக்கும் போது கனியுடன் சேர்த்து தனது பெருவிரலினையும் துண்டு போட்டு விட்டார். இரத்தம் சீறி அரசனுக்கு காவலாக இருக்கும் காவலாளிக்குப்பட்டது. அரசனோ வேதனை தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளை எல்லாம் நல்ல படியாக நடக்கும் "எல்லாம் நன்மைக்கே" என்று அரசனைப் பார்த்து கூறினான். நான் விரல் வெட்டப்பட்டு வேதனையில் இருக்கிறேன், ஆனால் காவலாளி துன்பங்களைப் பார்த்து நன்மைக்கே என்று கூறுகின்றானே என மனதில் நினைத்துக்கொண்டு காவலாளியை கோபமாகப் பார்த்துவிட்டு "எல்லாம் நன்மைக்கே" என்று கூறிய குற்றத்திற்காக சிறையில் வைத்து பூட்டினான் அரசன். சிறையில் காவலாளியை பூட்டியபோது இதுவும் "எல்லாம் நன்மைக்கே" என் றான். இதனைக் கேட்ட அரசனுக்கு கடுங்கோபம் வந்து விட்டது. ஆனால் கோபத்தை காவலாளியிடம் தீர்க்காமல் காட்டுக்குச்சென்று மிருகங்கள் மீது தீர்க்க வேண்டும் என நினைத்துக் கொண்டு காட்டுக் குச் சென்றான். காட்டில் மிருகங்கள் சந்திக்கவில்லை. அரசன்தான் காட்டுவாசிகளிடம் அகப்பட்டுக்கொண்டான். அப்போது அரசன் நினைத்தான் இன்று காவலாளியை கூட்டிக் கொண்டு வந்திருந்தால் நான் தப்பியிருப்பேன் என மனதுக்குள் நினைத்தான். காட்டுவாசிகள் தங்கள் குலதெய்வத்துக்கு உயிர்ப்பலியிடுவது வழக்கம். உடல் உறுப்புகளில் சேதம் ஏற்பட்டால் அவர்களை பலி இடுவது இல்லை ஆனால் சேதம் இல்லாதிருந்தால் அவர்களை பலியிடுவது வழமை. அரசனைச்சோதித்துப்பார்த்தபோது ஒரு விரல் இல்லை. இதனால் அரசனைவிட்டு விட்டார்கள். அரசனும் தப்பினேன் பிழைத்தேன் என்று அரண்மனை வந்து காவலாளிக்கு காட்டில் நடந்ததை தெளிவாகக் கூறினான்.

அப்போதும் காவலாளி "எல்லாம் நன்மைக்கே" என்று கூறினான். அரசனுக்குவிளங்கவே இல்லை. காவலாளி அப்போது தான் அரசனுக்கு கூறினான். "அரசே உங்களுக்கு விரல் இல்லாத காரணத்தினால் காட்டில் நீங்கள் தப்பிவிட்டீர்கள். அதே நேரம் நான் உங்களுடன் வந்திருந்தால் எனது உயிர் போயிக்கும். நீங்கள் சிறையில் பூட்டிய தனால் எனது உயிரும் தப்பிவிட்டது. ஆகவே எமது வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு தீமைக்கும் எமது மனதைத் தேற்றுவதற்கு எல்லாம் நன்மைக்கே என்று நினைத்து செயல்பட வேண்டும். பிறர் மீது கோபம் கொள்வது கூடாது" என்று அரசனுக்கு விளக்கம் கொடுத்தான் அரசனும் உண்மையை உணர்ந்து கொண்டு காவலாளி மீதுள்ள கோபத்தை மன்னித்து விடுவித்தான்.



செ.மோகன் சிலாவத்தை

# வாரம் ஒரு குறள் அறிவோம்



எமக்குரிய பொருளொன்றை இழந்து விட்டால் எவ்வளவு துன்படைகின்றோம். எப்படிப் போனது? எங்கே போனது? யார் எடுத்தார்கள்? என்றெல்லாம் எண்ணி எண்ணி வேதனைப்படுவோம். நித்திரை வராது. உணவு உட்கொள்ளமுடியாது. நண்பனையும் சந்தேகிக்க வேண்டி வரும். இந்நிலை எவ்வளவு கொடுமையானது. இதை நாம் உணர்ந்து கொண்டோமல்லவா? இதன்பின்னர், நாம் எவருடைய பொருளையேனும் எடுத்துக் கொள்ளலாமா? எடுத்து அடுத்தவரை துன்பத்தில் வீழ்த்தலாமா? எடுப்பதும், அபகரித்துக் கொள்வதும் மட்டும் தான் குற்றமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் வள்ளுவர் முன் தோற்றுத்தான் போவீர்கள்? அவர் என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்களேன்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வோம் எனல்"

எடுக்க நினைப்பதே குற்றமெனில் களவெடுப்பதென்பது........?

## ரதனும் சுதனும்



ரதன்: இடிதாங்கி எவ் வாறு இடியைத் தாங்கிக் கொள் கிறது?

சுதன்: மின்னல் உண்டாகும் போது அதன் பாதையில் இருக்கும்காற்று திடீரென்று விரிவடைவதால் இடி ஏற்படுகிறது.மின்னலைத் தவிர்த்தால் இடியையும் தவிர்க்கலாம்

இடிதாங்கியில் மின்சாரத்தைக் கடத்தக் கூடிய உலோகம் கூர்முனையாக வைக்கப்பட்டிருக்கும். இதனடிப்பகுதி தரையோடு நன்கு இணைக்கப்பட்டிருக்கும். இந்த அமைப்பை "எர்த்" என அழைப்பர். இடிதாங்கியின் கூர்முனைவழியாக மேகத்தில் உண்டாகும் மின்னேற்றம் தரைக்கு கடத்தப்படுகிறது. இதனால் இடிதாங்கிக்கு மேலே நிலைகொண்டுள்ள மேகத்தில் மின்னல் உண்டாகும் அளவுக்கு மின்னேற்றம் கூட வாய்ப்பு இராது. இவ்வாறு இடிதாங்கி பொருத்தியுள்ள கட்டிடம் இடியின் தாக்குதலின்றி காக்கப்படுகிறது.

# இன்ரபோல்



சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்ரபோல் அமைப்பானது 1923 ல் International police commsion எனும் பெயரில் உருவாக்கப்பட்டது. 1ம், 2ம் உலகப் போர்களின் போது அதிகளவில் செயற்படாது விட்டாலும் பின்னர் தனது செயற்பாட்டை அதிகரித்தது. 1956 ல் இன்ரநேசனல் பொலிஸ் ஆக்கனேசன் என பெயர் மாற்றப்பட்டது. இதில் 135 ற்கு மேற்பட்ட உலக நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதிலுள்ள உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தனது நாட்டில் தேசிய அலுவலகம் ஒன்றை (National central Beiredu) வைத்து உயர் காவலதிகாரிகளை உருவாக்க வேண்டும். இது இன்ரபோலுடன் நெருக்கமான தொடர்புகள் வைத்து இருக்க வேண்டும் என்பது பொதுவான நடைமுறை. இதன் தலைமையகம் பிரான்சின் பாரிசிற்கு அண்மையில் செயின் கிளவுட் எனுமிடத்தில் 6மாடிகளைக்கொண்டுள்ளது. இது $7^1/_2$ லட்சத்திற்கு மேற்பட்ட குற்றவாளிகளது புகைப்படம், கைரேகை, அடையாளம் போன்ற இதர தகவல்களைச் சேகரித்து வைத்துள்ளது.

v.வாசுகி
மல்லாவி

## பொது அறிவு

01.உலகில் பெண்களுக்கு கட்டாயம் பயிற்சி அளிக்கும் நாடு எது?
ஸ்ரேல்
02. முதல் பெண் தாதி யார்?
புளோரன்ஸ் நைற்றிங்கேள்
03.கோட்டான் என்ற பறவை எங்கிருந்து தமிழீழத்திற்கு வருகின்றது?
மத்தியாசியா
04.கோட்டான் புலம்பெயரும் காலம் எது?
செப்ரெம்பர்- ஒக்டோபர்
05.உலகின் முகடு என அழைக்கப்படும் இடம் எது?
திபெத்
06.கொம்பில் கண்ணுள்ள விலங்கு எது? நத்தை

துளசிகா
(பூங்கோதை)

# புலிச்சித்தி



புள்ளிப் புள்ளிச்
சேட்டுப்போட்ட
புலிச்சித்தி-உங்கட
துவக்கை தாங்கோ சித்தி.
எங்கே உங்கட தோடு சித்தி
என்ர தோட்டை தரவோ சித்தி
பச்சைப் பட்டியைத் தாங்கோ சித்தி
இடுப்பில் ஒருக்கா கட்டி விடுங்கோ சித்தி
பள்ளிக்கூடம் போட்டுவாறன் சித்தி

# தளிர்கள்

தலைவர் மாமா
தந்த எங்கள்
தளிர்கள்... இல்லத்தில்
தத்தி தத்தி நடந்து நாங்கள்
தமிழைப் படிச்சு
தமிழீழத்தை காப்போம்.

சூட்டிச்சித்தி.

## தகவல்கள்

01) கடலுக்கடியில் வேகமாக நீந்திச் செல்லும் மீன்
சுறா
02)நாக்கில்லாத கொடிய விலங்கு
முதலை
03)தரையில் வேகமாக ஓடும் விலங்கு
சிறுத்தை
04)சின்னஞ்சிறிய இதயம் கொண்ட விலங்கு
சிங்கம்
05)பச்சையம் இல்லாத தவாரம்
காளான்
06)ஞாபசக்தி கூடிய விலங்கு
யானை
07)அதிக நீர் அருந்தும் பறவை
புறா

க.கஜிதா
துணுக்காய்



# உங்களுக்குத் தெரியுமா?



01. இந்தியாவின் வாயில்-பம்பாய்
02. இருண்ட கண்டம்-ஆபிரிக்கா
03. புனித நாடு- பாலஸ்தீனம்
04. மத்தியதரைக் கடலின் திறவுகோல்- ஜிப்றோல்ரர்
05. ஏழுமலை நகர்- உரோம்
07. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்- சுவிற்சர்லாந்து
08. பொற்கோவில் நகரம்- அமிர்தசரஸ்
09. ஆயிரம்வாவி நாடு-பின்லாந்து
10 அட்றியாற்றிக் இளவரசி-வெனிஸ்
11 வங்காளத்தின் துயரம்-தாமோதரர் நதி
12. ஐரோப்பாவின் நோயாளி-துருக்கி
13. அதிகாலை அமைதி நாடு- கொரியா
14. நள்ளிரவுச் சூரிய நாடு-நோர்வே
15. நைலின் கொடை-எகிப்து
16. மஞ்சள் ஆறு- குவாங்கோ நதி
17 கங்காரு நாடு -அவுஸ்ரேலியா
18. உலகின் கூரை -திபெத்

வ.விஜயகலா
கிளி/பிரமந்தனாறு ம.வி

## விடுகதைகள்


01) சங்கீதம்பாடுவான் சலவைக்கும் உதவுவான் அவன் யார்?
02) ஐவருக்கும் ஒரு வீடு ஆனால் பாண்டவர்கள் அல்ல அவர்கள் யாவர்?
03) பச்சையனுக்கு வயதானால் சிவப்பாவான் அவன் யார்?
04) துள்ளி வந்தவன் துவண்டு போகிறான் அவன் யார்?
05) முள்ளுக்கூட்டைத்தாண்டினால் இனிப்புக்கூடு அது என்ன?
06) கடிப்பவனுக்கு கடிபடுபவன் காவல் அவன் யார்?
07) மக்கள் இல்லாத நாடு, அலை இல்லாத கடல் அது என்ன?
08) ஒற்றைக்கண்ணன் துணியைக்கண்டால் ஓடுவான் அவன் யார்?
09) சொல்லாமல் வரும் நில்லாமல் போகும் அது என்ன?
10) ஆள் ஏறாத மரத்தில் ஆயிரம் பூக்கள் பூத்திருக்கும் அது என்ன?

01)கழுதை, 02) உள்ளங்கைவிரல், 03)மிளகாய், 04) கடல்அலை, 05) பலாப்பழம், 06) பற்கள்,உதடுகள், 07) உலக வரைபடம், 08) தையல் ஊசி, 09) நாள், 10)விண்மீன்.

யோ.ருசாந், தரம்-2
கிளி/தருமபுரம் ம.வி

சொல்லின் பொருள் பற்றி நீ கவனி; ஒலிகள், தம்மைத்தாமே கவனித்துக்கொள்ளும். -லூயிஸ் கேரல்

செ. மெற்றாஸ் மயில்



# குழந்தையின் உடல் உள மேம்பாட்டில் நாட்டார் பாடல்கள்

**தாய் தன் குழந்தையைத் தலாட்ட எடுத்த முதல் நிகழ்வே குழந்தை இலக்கிய மாகிறது. எந்த கருவூலம் குழந்தையின் கருத்தையும் உள்ளத்தையும் கவருகி றதோ அதுவே குழந்தை இலக்கிய மாக பரிணமித்தது. இதில் தலாட்டு முதல் இடத்தைப் பெறுகிறது. அது உலகெங் கினும் ஓர் உள்ளத்தின் பாசவுணர்வில் ஊற்றெடுக்கும் ஒரு ஜீவ நதியாக விளங்குகிறது. அதில் தாயும் சேயும் சங்கமமாகின்றன.**

**நவீன** உலகில் நவீன கண்டுபிடிப்புக்கள், நவீன சிந்தனைகள், நவீன வாழ்க்கை முறைகள் உருவாகிய இன்றைய காலத்தில் வாழுகின்ற மனித இனத்திற்கு, நவீன நோய்களும், புதிய மருந்துகளும் ஆட்கொண்டுள்ள வேளையில், புராதன காலத்தில் எம்முன்னோர்கள் நோயற்ற வாழ்க்கையுடன், நீண்ட ஆயுளையும் கொண்ட பூரண மனிதர்களாக வாழ்ந்ததற்குரிய இரகசியங்கள் இல்லாமல் இல்லை. அதற்கு அவர்களின் கிராமிய வாழ்க்கை முறைதான் காரணமென அச்சொட்டாகக் கூறலாம். அவர்களின் கிராமிய வாழ்க்கை முறையில் நாட்டார் பாடலானது குழந்தை வளர்ந்து பருவமடையும் காலங்களில் பெறும் உடல், உள மேம்பாடு முக்கியமானது. அம்மேம்பாட்டின் மூலம், பண்பாடான உள வளர்ச்சி மிகுந்த, நோயற்ற உடல் வளர்ச்சி பெற்ற, பூரண சுகமுடைய பிரசைகள் அக்காலச் சமூகத்தில் உருவாக்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கிராமத்தவர் ஆட்டமும் பாட்டமும் இசையோடு சேர்ந்து தெம்மாங்கு பாடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதனால் கிராமந்தோறும் கிராமத்துப்பாடல்கள் தோன்றின. உழுதல், விதைத்தல், களை பிடுங்கல், அருவி வெட்டுதல், உப்பட்டி கட்டுதல், சூடடித்தல், நெல் குற்றுதல், வண்டியோட்டுதல், மரமரிதல், படகு ஓட்டுதல், மீன் பிடித்தல், முதலிய பல்வேறு தொழில்களை களைப்பின்றி, அலுப்பின்றி செய்ய கிராமத்து இலக்கியங்கள் தோன்றின. இன்னும் இளைப்பாறும் நேரங்களில் வருடப்பிறப்புக் காலங்களில், கோயில் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் ஊஞ்சலாடல், பல்வகை விளையாட்டுக்கள், கரகம், காவடி போன்ற கிராமத்துக் கலைகளுக்கு கிராமத்துப் பாடல்கள் தோன்றின. இவற்றை விட குழந்தை பிறந்ததிலிருந்து இறப்பு வரையும் உள்ள ஒவ்வொரு பருவத்திலும் இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் பாடல்கள் தோன்றின. இந்த வகையில் குழந்தை பிறந்து விளையாட்டுப் பருவத்தை அடையும் வரையிலான நாட்டார் பாடல்கள் அவர்களின் மேம்பாட்டுக்கு எந்தளவு உதவுகிறது என்பதனை நோக்குவதே எனது முக்கிய நோக்கமாகும்.

தாய் தன் குழந்தையைத் தலாட்ட எடுத்த முதல் நிகழ்வே குழந்தை இலக்கியமாகிறது. எந்த கருவூலம் குழந்தையின் கருத்தையும் உள்ளத்தையும் கவருகிறதோ அதுவே குழந்தை இலக்கியமாக பரிணமித்தது. இதில் தலாட்டு முதல் இடத்தைப் பெறுகிறது. அது உலகெங்கினும் ஓர் உள்ளத்தின் பாசவுணர்வில் ஊற்றெடுக்கும் ஒரு ஜீவ நதியாக விளங்குகிறது. அதில் தாயும் சேயும் சங்கமமாகின்றன.

ஓசையுணர்வை உணர்த்துவது செவிப்புலனாகும். இப்புலனுணர்வு, இளமையிலேயேசெவ்வையாக ஊட்டி வளர்க்கப் பெறுதல் வேண்டும். இது உடல், உள விருத்தியிற் பெரும் பங்கினைப் பெறுவதால், அது செம்மையாகப் பேணப் பெறுதலும் வேண்டும். குறிப்பாக, குழந்தையின் விடயத்தில் இவ்வுணர்வை மிகவும் கவனமாகவும் கரிசனையாகவும் கட்டிக் காக்கப்படல் வேண்டும். ஏனெனில் குழந்தையின் உடல் உள வளர்ச்சியிற் செவியுணர்வு கூடிய தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதனாலாகும். குழந்தையின் வயது, பருவம் முதிர்ச்சிக்கு ஏற்ப, அதன் தூண்டற்பேறுகளும், இயல்பூக்கங்களும் வெளிப்படும். அந்த வகையில் குழந்தையின் மனப்பதிவுக்கும், மனவிருத்திக்கும் முதற்கண் உறுதுணையாக நிற்பது குழந்தைப் பாடலேயாம். அதிலும் 'தாலாட்டு'ப் பாடலே குழந்தைக்கு முதன்முதலில் தன்தாய் மூலம் அறிமுகமாகும் ஒரு சிறந்த கருவூலமாம் என்றார் நம்நாட்டு அறிஞர் ஒருவர்.

குழுந்தை பிறந்தவுடன் "குவா!... ...குவா!......" என்ற இசை ஓசை எழுப்புகின்றது. அதற்குப் பதிலாக குழந்தையின் தாய் கொடுக்கும் இசையில் தன்வசப்பட்ட குழந்தை அமைதியாகி தூங்குகின்றது. குழந்தையின் மெதுமையான உள்ளத்தில் தொடும்படியாக தாலாட்டில் பொருளோடு சேர்ந்த தாயின் இனிமை யான இசை ஓசை குழந்தையின் செவியினூடாக ஊடுருவுகிறது. இசைக்கு அடிமை கொள்ளாதவர்கள் யாவருளர்? தாலாட்டின் இசையின்பத்திலே குழந்தை எல்லாவற்றையும் மறந்து கண்ணுறங்குகிறது. இத்தாலாட்டானது குழந்தைகளின் மெதுமையான இதயங்களைச் சுண்டி இழுத்து அவர்களை ஆனந்தக் களிப்பில் ஆற்றுப்படுத்துகின்றது. தாயின் பசுமையான நினைவுகளும், பக்குவமான கற்பனைச் சுவையும், எதுகைமோனை சேராத கவிச்சுவையும், பாசத்தை வளர்க்கும் பாங்கான அழகும் கொண்ட பாடல்கள் குழந்தையின் உள்ளத்தில் தூய்மையான சிந்தனையை வளர்க்க உதவுகின்றன.

''ஆராரோ....ஆரிவரோ
ஓராரோ...ஓரகண்டே
ஆரா...ரார.ராராரோ
ஆராரோ....ஆராரோ....ஆரிரரோ''


என ஆரம்பிக்கும் தாலாட்டின் மூலம் பிள்ளையை அழைக்கின்ற பண்பான சில வார்த்தைகள் அக்குழந்தையைக் களிப்பூட்டக் கூடியதாகவும் குழந்தையின் மனக் கருவில் சந்தோஷத்தை ஏற்படுத்தி தாய், சேய் பாச உணர்வை தூண்டும் சக்தியாகவும் விளங்குகின்றது.

(உ-ம்)
என் கண்ணே! என்
கண்மணியே! பூவே! பூமலரே!
சந்தனப் பூமேனியரே! செல்வ
மகனே! கற்பகமே!
பொன்னே பொக்கிஷமே
பொன் மகளே
மானே! மயிலே! வளர்பிறையே!
வாடாத பூவே! மானீன்ற
கன்றே தேடாத திரவியமே
மயில் பொரிச்ச நற்குஞ்சே

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். இப்படியான முன்னிலைப் பெயர்களின் பொருளை விழிப்பை குழந்தை அறிய, அறிய தானும் சிறந்த பண்பான குழந்தையாக ஆவதற்கும் தாலாட்டு மூலவேராக விருக்கின்றது. குழந்தை ஓரளவு வளர்ந்த பின் ஆனால் நடக்க முடியாத பருவத்திற்கு முன்பாக, தவழும் பருவத்தில் அக் குழந்தையை சந்தோஷப்படுத்துவதற்காக பல விளையாட்டுக்களை நாட்டார் பாடலுடன் தாய் சொல்லிக் கொடுப்பாள். தாயின் பாட்டுக்கு குழந்தை சில அசைவுகளையும் காட்டிக் கொள்ளும். இந்நிகழ்வே நாட்டார் பாடல்களில் அதிமுக்கியமான குழந்தையின் உடல், உள வளர்ச்சிக்கு பெரும் பங்கை வகிக்கின்றது.

இது எந்தத் தாயும் தெரிந்து கொண்டு விளையாட்டாக நாட்டார் பாடலைப் பாடியதாக எந்த ஆய்வுகளும் கூறியதாக இல்லை. அவள் பாடுகின்ற நாட்டார் பாடலின் ஊடாக அவளுக்குத் தெரியாமலே குழந்தை உடல், உள பயிற்சியைப் பெறுகிறது எனத் திடமாகக் கூறலாம். அது எவ்வாறு எனப் பார்க்கலாம்.

பிள்ளை சிரித்து விளையாடும் போது தாய், சகோதரர்கள், தந்தை பாட்டன், பாட்டி ஆகியோர்



பிள்ளையுடன் சேர்ந்து செல்லங் கொஞ்சுவார்கள். பிள்ளை சாய்ந்தாடும், தலையசைக்கும், கை கொட்டும், சந்தோஷத்தால் மனம் சிரிக்கும்.'தலையாட்டி வந்தான் தலையாட்டி' என்று பாட குழந்தை தலையாட்டி விளையாடும். அப்பொழுது தலைப் பயிற்சி பெறுவதை அவதானிக்க முடிகிறது.

'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' என்ற பாடலையும் 'ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்' என்ற பாடலையும் பாடும்போது குழந்தை காலை மடித்து இருந்து விளையாடிக் கொண்டு இடுப்புக்கு மேற்புறத்தே உள்ள பகுதி முழுவதையும் அசைத்து இசை ஓசைக்கேற்ப சாய்ந்தாடும். தாயின் கனிவான ஓசை மிகுந்த இசையும் குழந்தையை மனமகிழக்கூடிய நிலையில் முன்னிலைப் பெயர்களினால் குழந்தையை விழித்துப் பாடுவதானாலும் சாய்ந்தாடும் போது களைப்பின்றி சிரித்துக் கொண்டு விளையாடும். இதனால் உள்ளத்தில் ஏற்படும் குதூகலம் மனவளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் சாய்ந்தாடும் போது ஏற்படும் உடற்பயிற்சி, உடல் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாகவும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு பலவிதமான பாடல்கள் மூலம் குழந்தை தவழும் பிராயத்தில் நாட்டார் பாடலூடாக உடல், உள மேம்பாட்டினைப் பெறுகிறது. ஆனால் இப்பாடலை பாடும் போது அக்குழந்தையின் அசைவை ரசிக்கும் நோக்குடனேயே பாடப் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை நடக்க ஓடி விளையாடக் கூடிய பருவத்தை அடைந்தவுடன் விளையாட்டிற்கான நாட்டார் பாடல்கள் பெருவாரியாக வுள்ளன. ஒவ்வொரு பாடல்களுடனும் தொடர்பான விளையாட்டுக்கள் உடலிலுள்ள சகல அங்கங்களுக்கும் பயிற்சி கொடுக்கக் கூடியனவாகவே உள்ளது. பாடசாலைகளில் சென்று பயிற்சி வகுப்பு நடத்தி குறியீடு சொல்லி பயிற்சி வழங்குவது அக்காலத்தில் இல்லை. திண்ணைப் பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களுக்கு ஏது உடற் பயிற்சி வகுப்புகள் இருக்கும். எப்பொழுது கிராமிய வாழ்க்கை முறைகள் அருகி சிதையத் தொடங்கியதோ அதன் பின்புதான் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பாடசாலையில் பாடங்களாக வகுத்து கற்பிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. இவ்வசியம் ஏற்படுவதற்கு முன்பு கிராமிய வாழ்க்கை முறையோடு உடல் - உள வளர்ச்சிக்கு தேவையான கூறுகள் கலந்து காணப்பட்டன.

கிராமத்துச் சூழலில் பூத்துக் குலுங்கும் பூக்களையும், காய்களையும், கனிகளையும், பாடிப் பறக்கும் பறவைகளையும், ஓடித் திரியும் மிருகங்களையும், உலவித் திரியும் பிராணிகளையும், ஓங்கி நிற்கும் மரங்களையும், மலைகளையும், சுனைகளையும் ரசித்துப் பாடிய பாடில்களாகவே நாட்டார் பாடல்கள் மிளிர்கின்றன. இப்பாடல்களில் குழந்தைகளின் விளையாட்டின் தன்மைக்கேற்ப பாட்டின் ஓசையுடன் விளையாடிய குழந்தைகள் களைப்பின்றி நீண்ட நேரம் விளையாடினர். இப்பருவத்துக்கான விளையாட்டுக்கள் பலவுள்ளன. அவற்றில் பூப்பறித்தல், பூமதித்தல், கண்பொத்தி விளையாடுதல், கல்யாணம் பேசுதல், புள்ளிப்பீங்கான், மட்டைக் குடில் கட்டி விளையாடுதல், மாஸ் கொட்டை தெத்துதல், பறவை விளையாடல், கண்ணாமூச்சி, கங்காம்புளம், கீச்சு கீச்சுத் தம்பலம், ஊசாவாசா, பொறுக்கி விளையாடுதல், அப்படா விளையாட்டு கிட்டியடித்தல் என்பன குழந்தைப் பருவத்துக்குரிய விளையாட்டுக்களாகும். இந்த விளையாட்டு ஒவ்வொன்றுக்கும் பாட்டுக்கள் உள்ளன. உதாரணமாக ஒரு சில விளையாட்டுக்களை நோக்குவோம். குழந்தைகள் வட்டமாக நின்று துள்ளிக் குதித்துக் கொண்டு பின்வருமாறு பாடுவார்கள்.

"மூசா மூசா பள்ளியிலே
முப்பத்திரண்டு தென்னமரம்
காய்க்கும் பூக்கும்
கலகலக்கும்
காக்கா நிக்காரு கொப்பிலே''

இதனால் வியர்வை சிந்துமளவுக்கு உடற் பயிற்சி பெறுவர். அத்துடன் பாட்டுக்களைப் பாடுகின்ற, சொற் களை உச்சரிக்கின்ற பயிற்சியையும் பெறுவர்.

குழந்தைகள் வட்டமாகத் தரையில் குந்திக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஒரு குழந்தை தன்கையில் ஒரு கொத்தை வைத்துக் கொண்டு குந்தி இருக்கும். குழந்தைகளைச் (சில இடங்களில் திரியை வைத்திருக்கும்) சுற்றி வட்டமாக ஓடுவர். ஓடும் போது பாடும் பாடல்.

''கொத்திருக்கோ கொத்து
என்ன கொத்து
ஆலிங் கொத்து
போட்டுட்டுப் போங்க''

இவ்வாறு கேள்வியும் பதிலுமாக பாட, குந்தியிருக்கும் குழந்தைகளில் எவராவது ஒன்றுக்குப் பின்னால் கொத்தை வைத்து இருக்கும் குழந்தை வைத்துவிட்டு ஓடியிருக்கும். பின்பு கொத்து வைத்திருக்கும் குழந்தை திரும்ப ஓடிச் சுற்றுவார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஓடுவர். இது ஓட்டப் பயிற்சிக்கு மிகவும் சிறந்த விளையாட்டாகும்.

இரும்புக் கோட்டம் உடைத்தல் விளையாட்டு சிறுவர்களுக்கு உகந்த விளையாட்டாகும். சிறுவர்கள் சுற்றி வட்டமாக நிற்பார்கள். வட்டத்திற்கு உள்ளே ஒருவரும் வெளியே ஒருவரும் நிற்பார்கள். வெளியே உள்ளவர் உள்ளே நிற்பவரைப் பிடிக்க வேண்டி பின்வரும் பாடலை பாடி ஓடி சுற்றி வருவார்.

சங்கிலி புங்கிலி கதவத்தொர
ஏன்மாற்றேன் தேங்காப்புலி
பசுமாட்டைக் கண்டியா
இல்லை
ஓ.......ஓ......எங்கே
வீட்டுக்குள்ளே
ஒடைக்கேலுமா? ஒடைக்கலாது
என்ன வேலி இரும்புவேலி.

அத்துடன் பலவந்தமாக உடைத்து உள்ளே நிற்பவரை துரத்தி ஓடிப் போய் பிடிக்கவேண்டும். இவ் விளையாட்டுப் போன்றதே "பசுவும் - புலியும்'' விளையாட்டு. இவ் விளையாட்டின் மூலமும் குழந்தைகளுக்கு நல்ல ஓட்டப் பயிற்சி தேகப் பயிற்சி போன்றவை கிடைக்கின்றன.

குழந்தைகள், பறவைகள் போன்று கையை அசைத்துப் பாடி விளையாடுவார்கள். தரையில் அமர்ந்து கொண்டு தங்கள் கரங்களைப் பறவைகள் சிறகுகளை ஆட்டிப் பறப்பது போல் ஆட்டி ஆட்டிப் பாடுவார்கள். பாடும் பாடலானது

ஆலாப்பற - பற
அழகு பற - பற
கோழியே பற - பற
கொக்கே பற - பற
குருவியே பற - பற

வேறுமுறையிலும் பாடல்கள் உண்டு. இவ்வாறு கையசைச்சு பாடி ஆடும் போது முழுமையான உடற் பயிற்சியைப் பெறுகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விளையாட்டிலும் உடல் உள மேம்பாட்டுக்கான கூறுகள் இடம் பெறுகின்றன. இவ்விளையாட்டுக்கள் பாட்டினோடு தான் இடம் பெறுகின்றன. எனவே நாட்டார் பாடல்களினூடாக குழந்தைகள் உடல் - உள மேம்பாட்டைப் பெறுகின்றனர் எனலாம்.

தாக்குதலின் வீச்சுக்கு அப்பால் நிற்பதே சிறந்த பாதுகாப்புக் கவசம். - இத்தாலியப் பழமொழி.



# நீரோடிப் போனவழி நெடுமூச்செறியும் நிலமும் நீங்களும்



**மாரி** தொடங்கிவிட்டது. மழையும் பெய்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் இன்னும் வன்னியில் தண்ணீர்த்தட்டுப்பாடு தீரவில்லை. பலருடைய வீடுகளிலுள்ள கிணறுகள் நீர் முகத்தைக் காட்டுவதற்குப் பதிலாக நிலமுகத்தையே காட்டுகின்றன. போகிற போக்கைப் பார்த்தால் கிணறுகளின் அடிவயிற்றில் கூட ஈரகுழுமைக்குப் பதிலாக இனி அனல் மூச்சுத்தான் கிளம்பும் போல. வீடுகளில் கிணறுகளை வைத்துக் கொண்டே பலரும் நீர்தேடி வேறிடங்களுக்குப் போகிறார்கள். குடிக்கும் நீருக்கே இப்படிப் பிரச்சினை இருக்கும்போது எப்படி பாசன நீர், பயிருக்குக் கிடைக்கும்.

இந்தத்தண்ணீர்ப்பிரச்சினை வருசம் வருசம் கோடையில் வரும் வழமையான ஒரு நிலையாகவே உணரப்பட்டு வருகிறது. இங்கே இப்படி எங்களுடைய தண்ணீர்ப்பிரச்சினை இருக்கும் போது நாங்கள் அதிகம் கதைப்பது காவேரி நீர்ப்பிரச்சினை பற்றித்தான்.

எங்களின் கிணறுகள் ஏன் வற்றிக் தொலைகின்றன? கிணறுகளை வெறுமையாக வைத்துக்கொண்டு வெறும் குடத்துடன் நாங்களேன் வேறிடங்களுக்கு அலைகிறோம் என்று யோசித்திருக்கிறோமா? சுட்டெரிக்கும்கோடையென்றாலும் இவ்வளவுக்கு வரட்சி வரவேண்டியதில்லையே.

ஆறுமாதக் கோடையையும் தாக்குப் பிடிக்கும் மழை ஓரளவு எங்களுக்குண்டு. அதிலும் மூன்று நான்கு மாதங்கள் மாரிமழை. ஆனால் நிலம் வறள்கிறது. கிணறுகள் வறள்கின்றன. பயிர் பச்சை எல்லாம் வாடி வதங்குகின்றது.

இப்பொழுது பெய்துகொண்டிருக்கும் மழையில் கூட கிணறுகள் நிரம்பவில்லை: ஊறத்தொடங்கவும் இல்லை. பெய்யும் மழை வெள்ளமாகி தங்கிநிற்க இடமின்றி ஓடி ஓடி தொலைக்கோடி கடலில் போய்ச் சேருகிறது. போகும் வெள்ளம் ஊரிலுள்ள வளங்களை அடித்துக் கொண்டு போகிறது. மண்ணை அரித்துக் கொண்டு போகிறது. நில அமைப்பைப் பாழாக்கிக் கொண்டு போகிறது.

தூரம், தொலைவு ஒன்றிற்கு குளங்களைத்தவிர நீர் நின்றாறுவதற்கு எந்த வழியுமில்லை. அந்தக் குளங்களும் காட்டாற்று வெள்ளத்தையே அநேகமாக ஏந்துகின்றன. 'ஊர்த்தண்ணி' முழுக்க பாதைகளை ஆறுகளாக்கி பாய்ந்து போய் விடுகிறது. மிங்சுவது மணலும் நீர்போன சுவடும் தான்.

எல்லா நீரையும் சேமிக்கும் நுட்பமின்றி, வழக்கமுமின்றி கடலுக்களித்துவிட்டு வெறுங்குடத்துடன் அலைகிறோம். வாடும் பயிர்களைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறோம். நிலமோ அனல் மூச்சு விடுகிறது.

" எல்லா நீரையும் சேமிக்கும் நுட்பமின்றி, வழக்கமுமின்றி கடலுக் களித்துவிட்டு வெறுங்குடத்துடன் அலைகிறோம். வாடும் பயிர்களைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறோம். நிலமோ அனல் மூச்சு விடுகிறது."

இது வன்னிக்கு மட்டுமான பிரச்சினையோ அல்லது நிலையோ அல்ல. யாழ்ப்பாணத்தின் கதையும் பெருமளவுக்கு இப்படித் தானிருக்கிறது.

அங்கேயும் 'நிலத்தடி நீர் உவராகி நீர்ப்பிரச்சினை வலுவாகும் அபாயத்தை நோக்கி நகர்கிறது' என்றெல்லாம் பலரும் கூறிவந்திருக்கிறார்கள். போனவாரம் கூட யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்பற்றிய அபாய எச்சரிக்கையை கவலையுடன் தெரிவித்திருந்தார் ஒரு ஜேர்மனியர்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றியிருக்கும் கடலுக்கும் குடாநாட்டுக்குள் ஊடறுத்து விரிந்திருக்கும் தரவைக்கும் மழைநீரைக் கையளித்துவிட்டு பேசாதிருக்கிறோம் நாம்.

புதிய நீரணைகளை கட்டுவது பற்றியோ நன்னீர்ச் சேகரிப்புக் குறித்தோ நமக்கு ஆர்வமில்லை. நீர்ச் சேகரிப்பின் மூலம் புதிய நிலக் காட்சியையும் வளத்தையும் பெறலாம் என்ற லாபகரமான உண்மை கூட நமக்குப் புரியவில்லை. நிலத்தடி நீரின்மட்டமும் நீரின் தன்மையும் குறைந்தும் மாறியும் வருகிறது என்று தெரிந்தபின்பும் நமக்கு எந்தக் கவலையும் வரவில்லை என்றாலும் அதை என்னவென்பது.



வெளிவாசல் பாலன்.

உலகெங்கும் இனி 'நீர்ப் போர்'தான் நிகழும் என்ற குரலும் கணிப்பும் தீவிரமாகி விழிப்புணர்வை மக்களிடையே கோருகிறது. உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் குடிதண்ணீருக்கே பாடாய் அலைகிறார்கள். நீரை வைத்தே அடிமைப் படுத்தலும் பேரம் பேசுதலும் நடக்கிறது பல இடங்களில்.

ஒரு காலம்- அதுவும் விரைவாக - நாமும் இப்படியொரு அபாயச் சூழலுக்குள் சிக்கிவிடுவோமோ என்று அச்சமாகியிருக்கிறது.

துறைசார்ந்த சிந்தனையுடையோர் ஈடுபாடுடையோர் ஆயினும் இந்த அபாயச் சமிக்ஞையை எல்லோருக்கும் உணர்த்த வேண்டாமா? ஒரு நல்வழி திறக்க யோசிக்கக் கூடாதா? இப்ப டியே இருந்தால் எப்போதோ காலம் வரும்? எந்தத் தேவதை வந்து வரமருளும்.

நீர்ச்சேமிப்பும் நீர்ப்பராமரிப்பும் இணைந்த நீர்முகாமைத்துவம் பற்றிய எண்ணமுடையோர் கள ஆய்வுகளையும் முன்மாதிரி வேலைத் திட்டங்களையும் முன்வைக்க வேண்டும். நிதியில்லை, அனுமதிகளில்லை என்றெல்லாம் காரணங்களை முன்வைத்துப் பதுங்கும் மனோநிலை. பின்னர் பெரும் அபாயங்களிடையே பரிசளிக்கும் என்பதை உணரலாம்.

ஆகக் குறைந்தது சமூக மட்டத்திலான மக்கள் விழிப்புணர்வைத் தூண்டி பாரம்பரியமான நீர்ச்சேகரிப்பையாவது தொடங்கலாம். செய்யலாம். மரபுரீதியான நீர்ச்சேகரிப்பில் ஈடுபடுவதற்கான தொடக்கம் என்பது கூட இப்போது இல்லையென்பதே கவலையானது.

---

## படித்ததில் பிடித்தது

# ஓ ! எந்திர மனிதனே



**இன்று** அதிகாலை மூன்று மணிக்கு ஜன்னல் வழியே வந்த ஒரு மழைவாசனையில் நான் விழித்துக் கொண்டேன்.

வெளியே தெரு விளக்கின் வெளிச்சத்தில் வந்து விழுந்து கொண்டிருந்தன வைரத் தாரகள்.

இது என்ன? நான் விழித்துக் கொண்டே காணுகிற கனவா?

அந்த நேரத்தில் மின்னல் தீக்குச்சி கிழித்து மேற்கு வானம் அது மழைதான் என்று சிபாரிசு செய்தது.

நானும் ஒரு புல்லாய்ப் புல்லரித்தேன்.

ஜன்னலோரம் நனையும் பூவாய்ப் புளகித்தேன்.

வானத்தை நோக்கிக் கை நீட்டி கொண்டு மழையை யாசித்துக் கொண்டிருந்த கிளைகளுக்கெல்லாம் இன்று கிளர்ச்சி .

கையில் ரோச் விளக்கை எடுத்துக்கொண்டேன்.

உறக்கத்தையும், தலையணையையும் அணைத்துக்கொண்டு படுத்திருந்த என் மகனை எழுப்பினேன்.

உறக்கத்தையும் என்னையும் உதைத்துக் கொண்டே அவன் எழுந்தான்.

ரோர்ச் விளக்கின் வெளிச்சத்தை ஜன்னலுக்கு வெளியே வீசி, அவனுக்கு மழையின் முகம் காட்டினேன்.

என் தோள்களை கட்டிக் கொண்டான். உறக்கக் கரகரப்பு ஒட்டியிருந்த குரலில் 'அப்பா, மழை!' என்று எனக்கு மழையை அறிமுகம் செய்து வைத்தான்.

அந்த மகாகவி சோகப்பட்டதற்குச் சற்றும் குறையாமல் நானும் சோகப்படுகிறேன்.

நம் மனிதர்களின் இதயத்தில் இயற்கையை நேசிக்கும் பிரதேசம் இருண்டே கிடக்கிறது.

இவர்கள் சூரியோதயத்தைப் பார்த்தது கூட ஒரு ராத்திரியில் தான்: அதாவது, திரைப்படத்தில்.

இவர்களுக்கு அஸ்தமனத்தை அறிமுகப்படுத்தியதே பாலுமகேந்திராதான்.

நாம் வாழ்வது எந்திர வாழ்க்கை என்பதையும், பரபரப்பின் குழந்தைகள் என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால்,அதே நேரத்தில் வாழ்வின் சின்னச் சின்னச் சந்தோஷங்கள் நம்மைக் கடந்து போகும்போது நாம் உறங்கி விடுகிறோம்.

நம்மைச் சுற்றிச் சுற்றி நம் பார்வைகளை யாசிக்கும் சௌந்தர்யங்கள் பலப்பல.

எந்திர மனிதனே! அவற்றுக்காய் உன் மனத்தை சில நிமிடங்களாவது கடன் கொடு.

அதோ, மரங்களின் நிறமம் மாறும் தளிர்கள்!

உதிரும் தேதி தெரியாமல் உல்லாசமாயிருக்கும் மலர்கள்.

நட்சத்திரங்களின் இடைவெளிகள்!

நறுக்கிப்போட்ட நகமாயிருந்த ஒவ்வொரு சென்றி மீற்றராய் வளரும் நிலவு!

கரை நோக்கி வந்து தற்கொலை புரிந்து கொள்வதில் ஓர் அலை அடையும் ஆனந்தம்.

மின்சார ரெயிலின் ஜன்னலோரத்துச் சந்தோசம்!

மின்சாரம் இல்லாத இரவுகளில் மெழுகுவர்த்திச் சுடர்களின் நடனம்!

நகரத்தின் ராத்திரிச் சாலைகள்.

அதிகாலையில் தென்னங் கீற்றுகளின் இடுக்கில் நுழைந்து வரும் சூரிய ஒளி.

இவைகளையெல்லாம் தரிசிப்பதற்கு உன் கண்களுக்கு கற்றுக் கொடு எந்திர மனிதனே!

தவறாகப் புரிந்து வைத்திருக்கிறாய் நீ!

சொர்க்கம் என்பது சுவரொட்டிகளில் இல்லை.

உன்னைச் சுற்றியுமிருக்கிறது.

போர்க் களத்தில் பள்ளத்தில் பதுங்கியிருக்கும் படை வீரன் கூடத் தன் காலடியில் மிதிபடும் பூக்களைக் கண்டு கொஞ்சம் புளகிப்பானே - அப்படித்தான் அது.

நம்மை அமிழ்த்தும் நிகழ்கால நிமிசங்களிலிருந்து நம் புலன்களைக் கொஞ்சம் புதுப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடு இது.

இயற்கையின் மடியில் நீ இளைப்பாறக் கற்றுக் கொண்டால் வேறெந்த வஸ்துகளிலும் உன்னை இழக்க வேண்டியிருக்காது.

வருத்தமாயிருக்கிறது.

போகிற போக்கைப் பார்த்தால் நம் இளைஞன் இனி பூக்களில் கூடச் சதை வழிகிறதா என்று கவனிப்பான் போலிருக்கிறது.


எந்திர மனிதனே!


புலன்களைப் புனிதப்படுத்து.

இயற்கையை நேசி: இயற்கையை சுவாசி.

கண் திறக்கும் உன் குழந்தைக்கு எழுத்துக்களுக்கு முன்னால் இயற்கையைச் சொல்லிக் கொடு.

●●





வைரமுத்து

## தாயகப் பயண அனுபவப் பகிர்வு

# தாய்மடி வாசம்

10.02.02 'டுசல்டோர்ப' விமான நிலையம்.
தாயகம் செல்லும் நினைவோடு மனசு வானேறிப் பறக்கிறது. அன்னிய முகங் களுக்கு
நடுவே அந்த மணித்துளிகள் கரைந்து கொண்டிருந்தன.
*"அம்மா எனக்கு கனக்க புத்தகங்கள் வாங்கி வாங்கோ. என்னம்மா...."*
என் ஆறு வயது மகன் அடிக்கடி எனக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தான்.
*"எனக்கு விளையாட்டுச் சாமான் வாங்கிவாங்கோம்மா..."*



என் 4 வயது மகள் தனது விருப்பமாய் சொன்னாள்.
*"சரியடா குஞ்சு. அம்மா பிள்ளை யளுக்கு எல்லாம் வாங்கிவாறேன் என்ன.."*
என் மகளை அணைத்துச் சொல்கிறேன்.
*"அம்மா எனக்கு விலை குறைவா இருந்தா ஒரு தங்கச்சி பொம்மையும் வாங்கி வருவீங்களே....!"*
என் காதுக்குள் மெல்ல முணுமுணுத்தாள் மகள். அந்த வார்த்தைகள் நெஞ்சில் ஈட்டியாய் விழுகிறது. ஈரமாகிய விழிகளை அவளை அணைத்து மறைத்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறுசுகளின் சின்னச்சின்ன ஆசைகளைக்கூட நிறைவேற்றத் தடை நிற்கும் எங்களது பொருளாதாரம். இந்த வயசில் எனக்கிருந்த ஆசைகள் தானே இவர்களுக்கும். இங்குள்ள எங்களில் பாதிப்பேரின் நிலை இதுதான். எங்கள் ஒரே நினைப்பு ஊருக்குப் காசனுப்ப வேணும். அங்கையிருக்கிறவையின்ர திட்டுக்களை தாங்கிய கடிதங்களைப் பார்க்க விரும்பாமை. அல்லது உண்மையி லேயே கஸ்ரப்படும் குடும்பத்தின் பொரு ளாதாரபலத்தை உயர்த்தும் பொறுப்பு இருக்கும். இப்படி எங்கள் பிள்ளைகளுக் கென இங்கு தரப்படும் சமூக உதவி களைக் கூட ஊருக்கு அனுப்பி விட் டாலும்...
*"உதென்னத்துக்குக் காணும்.., தும்மவும் காணாது..., பக்கத்து வீட்டுப் பொடியனும் உனக்குப் பிறகு போனது. பெரிய வீடும் கட்டி அதுகளின்ர குடும்பம் எப்பிடியிருக்குது...., எங்களுக்கு கடமைக்குத்தான் நீ...."*
இப்படி இடியாய் நெஞ்சிலும் மனசிலும் வந்து விழும் கடிதங்களும் தொலைபேசி அழைப்புக் களும்....,
எப்படி இவை எங்கள் பிள்ளை களது விருப்பை நிறைவேற்ற விடும்.....?
*"இந்தப் புலம் பெயர் வாழ்வில் எங்கள் பிள்ளைகளுக்கு ஆசைப்பட்டதையெல் லாம் கொடுக்கிறோம் என்றும், இதையெல்லாம் ஊருக்கு உதவலாம் என ஊடகங்களில் தங்கள் குரல்களால் மட்டும் முழக்கும் அறிவிப்பாளர்களுக்கு இந்தப் பிள்ளைகளைக் காட்ட வேண்டும் போலிருந்தது. அறுபது தாண்டிய வர்க்கே எமது பொருளாதார பலம் புரியாது அறுக்கும் போது, என் ஆறு வயதுப் பிஞ்சு விலைகுறைவா இருந்தா தனக்கு தங்கச்சிப் பொம்மை வாங்கக் கேட்கிறதே....*
*இந்தச் சிறு பூவின் புரிதலை இந்த வாய்முழக்க அறிவிப் பாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரிய வாய்ப்பேயில்லை."*

நான் பயணிக்கவிருக்கும் எல்ரியூ விமானம் புறப்படுவதற்கு இன்னும் இரு மணித்தியாலங்கள் இருப்பதாக அறி விக்கப்பட்டது. கணவர் - பிள்ளைகளிடம் விடைபெறும் நேரமது.
*"என்ரை செல்லங்கள் அப்பாக்குக் குளப்படி செய்யாமலிருக்க வேணு மென்ன....! தங்கச்சியோடை தம்பி சண்டைபிடிக்கக கூடாது...அம்மா வாறவ ரைக்கும்அப்பாக்கு அட்டகாசம் பண் ணாமை அச்சாப்பிள்ளை யளா இருக்க வேணும்."*
எனது வேண்டுதல்களுக் கெல்லாம்
*"நாங்க குளப்படி செய்யாமை இருப்பம்"* *என்கிறார்கள் பிள்ளைகள்.*
*போய் ரெலிபோனெடும்"*
கணவரின் வேண்டுதல் அது.
*"சரி பிள்ளையள் கவனம். காறோடுறது கவனம். ஆறுதலா ஓடுங்கோ... பிள்ளை யளோட கோவிக்காமல் இருங்கோ."*
சொல்லிவிட்டு உள்ளே போகிறேன்.

இவர்களிடமிருந்து விடைபெற்று சோதனைகள் முடித்து விமானம் ஏறும் விறாந்தையில் இருக்கிறேன். தமிழ்க் குடும்பம் ஒன்று 2 பிள்ளைகளுடன். அந்தத் தமிழன் கோட் சூட்டுடன் இருந்தார்.
அடிக்கடி பிள்ளைகளுடன் அரைடொச்சில் கதைப்பதும் சிரிப்பதுமாக..... அவனது மனைவி *'குன்ராக'* என்றாள் எனைப் பார்த்து. நான் வணக்கம் என் றேன். அந்தத் தமிழன் தன்னை யும் ஒரு வெள்ளையாகக் காட்டிக் கொள்ளும் அவசரத்தில் ஒரு 'மல்போறா' சிகரட்டை தன் உதட்டில் வைத்து புகையை உள்ளிழுத்து வெளியே விட்டுக் கொண டிருக்க அவனது சிறிய மகன் 4 - 5 வய திருக்கும் தானும் கையிலிருந்த விளை யாட்டுச் சாமான் ஒன்றினால் புகை விட்டுக் காட்டினான். சற்று நேரத்தில், ஊரிலிருந்து தாங்கள் ஜேர்மனியில் இருக்கும் நகரம், தமிழர்களின் பழக்கம் வரை உரையாடி னார்கள்
*"நாங்க தமிழாக்களோடை பழகி றேல்லை"*
*"ஏன?"* *கேட்ட எனக்கு*




*"தமிழாக்கள் ஒரேபோட்டியும் பொறாமை யும் பிடிச்சதுகள். வெளிநாடுவந்தும் மாறேல்லைச் சிலசனம்"*
சுத்தப்பட்டிக்காட்டுத்தனம் அவர்களின் செயற்பாடு, பழக்கம் அனைத்திலும் எழுதி ஒட்டியது போலிருந்தது. ஆனால் தமிழர் களின் குணம் பற்றி அவர்களது பேச்சைக் கேட்க சிரிப்புத்தான் வந்தது. அந்த வெள் ளையளுக்கு நடுவில் சத்தமாக கதைப்பதும் பிள்ளைகளை வேண்டுமென்றே தமது செயற்பாடுகளை அவர்களைப் போல் செய்வதுமாய் அந்த தமிழ்க் குடும்பம்.....

எல்ரியூ 724 விமானத்தில் பயணிக்க விருக்கும் பயணிகளுக் கான அறிவித்தல் அது. பயணிகள் தங்கள் *'போர்டிங் பாஸ்'* மற்றும் அடையா ளங்களுடன் விமானத்தில் ஏறிக் கொள்ள எனது கு 24 சீற்றைத் தேடி அமர்ந்து கொள்கிறேன். நேரம் இரவு 7.45. விமானம் வானேறிப்பறக்கிறது. வன்னியைப் பார்க்கும் நினைவோடு தூங்கிப் போகிறேன்.
11.02.02 மதியம் 1.27.
கட்டுநாயக்கா விமானநிலைய ஓடுபாதை யில்விமானம் தரையிறங்கப் போவதாய் அறிவிப்புக் கேட்கிறது.
*"அன்றொரு நாள் அவர்கள் தந்த அவலத்தின் எதிரொ லியாய்....*
24.07.2001 இதே ஓடு பாதையில் தங்கள் செங்குருதியை ஊற்றி இந்த பிரதேசத் தையே அதிர் வித்து...ஏன்...,உலகையே வியப்பில் ஆழ்த்திய அந்த வீரசாத னையைச் செய்து முடித்து அனாமதேய மாய் எம் ஆத்மாக்களில் உறங்கும் அற் புதங்களை எண்ணுகிறேன். இணையங் களில் அந்தச் சாதனை வீரர்கள் ரத்தத்தில் குளித்துக் கிடந்த காட்சிகள், செய்திகள் என் நினைவுகளில் வந்து போகின்றன. அன்று அந்த வீரச் செய்தி கேட்டு ஆணவச் செருக்கோடு அவர்களை ஆராதித்து அஞ்சலித்த நான், இன்று அவர்கள் பாதம் பதிந்த இந்த மண்ணில் இறங்கப் போகிறேன்.
ஓ.........எங்கள் இனியவர்களே.....!
எங்கே உங்கள் தடங்கள் பதிந்துள்ளன...?
யாராவது காட்டுங்களேன்.......
எங்களை நிமிர வைத்த - அந்த
நெருப்பு மலர்களின் காற்தடங்கள்
எங்கே....?
அதோ தொலைவாய்த் தெரியும்
அந்தத் தென்னைகளே
உங்களுக்குத் தெரியுமா....?.
ஓ....காற்றே இறுதியாக அவர்கள்
எங்கே மூச்சு விட்டார்கள்.....???
சொல்லாயா எனக்கு....!
உனக்குத் தானே தெரியும்
அவர்கள் உயிர்மூச்சு எங்கே
கலந்த தென்று..!
காற்றே சொல்லு....
எங்களை வாழ்விக்க
அமைதியாய்ப் போன
அவர்களது மூச்சு எங்கே...!
முகவரி எங்கே...!
*"மகளே !*
*உலகின் திசையெங்கும்*
*அவர்கள் மூச்சு உலவுகிறது.*
*நீ சுவாசிக்கும் இந்தத் காற்றோடு*
*அவர்கள் கலந்திருக்கிறார்கள்.*
*கைதொழு, அவர்களை*
*கண்ணிலொற்று.....*
*உங்களை நேசித்த அவர்கள்*
*உங்களுடனே வாழ்கிறார்கள்."*
*காற்றின் மொழி என் காதுகளில் கேட்பதாய்...*
*ஓ.....எங்கள் இனியவரே.....!*
*உங்களை வணங்குகிறேன்.*
மதியம் 2.17. சோதனைகள் முடிந்து விமான நிலையம் விட்டு வெளியே வரு கிறேன்.
என்னை அழைத்துப்போக தங்கச்சியும், மாமியும், அப்பாவும், மச்சானும் காத்திருந் தார்கள். பத்துவருடத்துக்கு முன்னால் நான் பார்த்த தங்கச்சி பிறேமினி. என்னை விட உயரமாகவும் வளர்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் ஓடிவந்து கட்டி யணைத்து அழுதாள். என்னை மறந்து நானும் அழுதுவிடுகிறேன். இவர்களை யெல்லாம் காண்பேனா எனும் கனவி லிருந்த என் கனவு பலித்து......அவர்களுடன் நான்.
*"என்னது சந்தோசப்படவேண்டிய நேரத்தில அழுது கொண்டு. .. அழாமை வாங்கோ"*
என்றா மாமி.
வழியெல்லாம் இராணுவம் கொலைகார முகங்களாய்... காவல் நின்றது. எங்களைக் காவிச் செல்லக் காத்திருந்த 'வானில்' ஏறுகிறோம். எங்களைச் சுமந்து கொண்டு *'வான'* புறப்பட்டது. இத் தனை பாதுகாப்பிற்கும் மத்தி யில் தானே எங்கள் புதல்வர் கள் தீகொண்டு புகுந்தார்கள். இவர்களையெல் லாம் புலன்கலங்க கலக்கி அடித் தார்கள்....!!!
கதிர்காமரும் ஓடியோடி அழுதவர்.
*"அந்த அதிகாலையில்*
*அஸ்தமனமாகி*
*விடிகாலையை நாங்கள்*
*வெற்றியாய் மகிழ விழுதானவரே....!*
*போற்றுகின்றோம் உம்மை.*
*உங்களை எங்களுக்காய்*
*ஈந்த அந்த கருவறைகளே....!*
*உங்களையும் வணங்குகிறேன்.*
*ஓ...எங்கள் இளையவரே....!*
*உங்களுக்கு என் கோடி வணக்கம்.."*
*"இவ்வளவு பாதுகாப்புக் கைதானே அடிவிழுந்தது."*
*"ம்.....இப்பகுறைவு. முந்தியெண்டா கனக்க நிப்பாங்கள். சரியான பாதுக ாப்பு. இப்ப யுத்த நிறுத்தமெண் ட படியா கொஞ்சம் குறைவு"*
எனக்குச் சொன்னார் அப்பா.
*"சரி பிள்ளை வெள்ளைக் காறியா வருவாயெண்டு நினைச்சன். நீ தமிழிச் சியா வந்திறங் கியிருக்கிறாய்."* கேட்டார் அப்பா.
*"அப்பென்ன கொம்பேதும் முளைச்சு வருவனெண்டு நினைச்சனீங்களே...."*
கேட்ட எனக்கு அப்பா சொன்னார்.
*"வெளிநாட்டிலையிருந்து வாறாயெண்டு சொன்னா சனம் நம்புறமாதிரியாவது இருக்க வேண்டாமே."*
*"ஓ....எல்லாம் சொல்லுவியள். அங்கை நாங்கள் கூட்டிக் கழுவி, பெருக்கி அனுப் பிற காசல்லே..., எல்லாம் சொல்லும்"*
என்ற எனக்கு அப்பா சொல்லுகிறார்.
*"அங்கையிருந்து வாறதுகளின்ர உடுப் பென்ன, நகையென்ன, தகுதியென்ன, நீ ஏதோ பெரிய கரைச்சல் படுகிற மாதிரிக் கதைக்கிறாய்...."*
என்ற அப்பா மீது கோபம் தான் வந்தது.
*'டிசம்பர் குளிருக்கை இதுகளை அங்கை கூப்பிட்டு விடவேணும். அப்பத்தான் நாங்கபடுகிற கரைச்சல் இவைக்கு விளங்கும். வெளிநாட்டுக் காசு..... அங்க நிண்டாத் தெரியும் எல்லாம்'* சொல்ல வேணும் போலிருந்தது. அமைதி யாய் இருக்கிறேன்.
13.02.02. காலை 7.30 மணி. வவுனியா பிறவுண் கொம்பனி வாசலில் வன்னிக்குச் செல்வதற் கான அனுமதி பெறுவதற்கான காத்திருப்பு. கால்கள் உளைகிறது.

(தொடரும்)

தன்னைத்தான் மதிக்கும் அளவிற்கு, ஒரு மனிதரைப் பிறர் மதிப்பது கடினம். -வொவனார்க்

# பதினாறாம் நாள் நினைவு நிலை நிறுத்தி



| அன்னையின் அரவணைப்பில் | ஆண்டவன் மலரடியில் |
|---|---|
| 20 | 11 |
| 04 | 11 |
| 1979 | 2002 |

## அமிர்தலிங்கம் விக்கினராஜா

(வீட்டுக்கிருத்திய அழைப்பு)

கரணவாய் மண் பெற்றெடுத்த
அன்பான உன் குணத்தால் ஆட்கொண்டாய் எம்மை
அலறித் துடிக்கின்றோம் ஆற்றுவார் யாரோ?

மாப்பிளைக் கோலம் காணும் இவ்வேளையில்
மனம் பொறுக்கவில்லையோ இறைவா உனக்கு
உன் பணியே தன் பணியென்று ஒரு நாளும்
உண்ணாது உறங்காது பூஜை செய்தும் – இன்று
எமையெல்லாம் தவிர்க்க விட்டு எங்கட தம்பி?
என்று எல்லோரும் எமைக்கேட்க

மண்ணில் மிக நல்லாரை விண்ணவரும் மிக விரும்பி
தன்னகத்தே அழைத்து விடல் எந்நாளும் நியதி.
ஐயோ!
எம்முடனே நீ இருந்தாய். என்றும் வரும்
என்றிருந்தோம்.
சிம்மமெனவளர்ந்த நீசிலையானது என்ன விந்தை?
விக்கி விக்கி என்று விக்கி நிற்கின்றோம். விரும்பி
எமையொருக்கால் திரும்பி பாராயோ.

யாழ்/கரணவாயைப் பிறப்பிடமாகவும், நாகதம்பிரான் கோவில் புளியம்பொக்கணையை வதிவிடமாகவும், 11-11-2002 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச் செல்வம் அமிர்தலிங்கம் விக்கினராஜா (இறை அன்பன் விக்கி ஐயா) இவரின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தில் இருந்த எம்மை எல்லாம் ஆறுதல்படுத்தி சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபைக்கும் மற்றும் இவர் கடமையாற்றிய சகல ஆலய பரிபாலன சபைக்கும், கண்ணீர் அஞ்சலிகளை நல்கிய அனைவருக்கும் உடனிருந்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி நவிலலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாகதம்பிரான் கோவில்,
புளியம்பொக்கனை. (2619) பெற்றோரும்
உடன்பிறந்தோரும்.


# இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர"

## வடபகுதி களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி




வடபகுதி விவசாயிகள்> அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்> விவசாய சேவை நிறுவனங்கள்> கூட்டுறவு சங்கங்கள் தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம் விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

## வேலும் மயிலும் களஞ்சியம்


353,முதன்மைச்சாலை. கிளிநொச்சி.

(ஈழநாதம் பணிமனை முன்பாக)

(சி-7531)


# 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 - 11 - 1944
★
உதிர்வு
11 - 12 - 2001





மலர்வு
10 - 02 - 1978
★
உதிர்வு
04 - 07 - 2000

**கதிரவேலு கந்தசாமி**

**2ம் லெப்.நாமதி**
கந்தசாமி கலைமதி

(சண்டிலிப்பாய் வடக்கு, யாழ்)

01-12-2002 அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள முதலாம் ஆண்டு நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

'நன்றி'

தற்.முகவரி
இல.259, ஸ்கந்தபுரம் (2634) தகவல்
குடும்பத்தினர்.

# மாண்பு மிகு கிளி மாவட்ட கல்வியியலாளர்களை வாழ்த்துகிறோம்



மனித வள அபிவிருத்தி கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு (IDA) உலக வங்கியின் அனுசரணையுடன், அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ் இருவார கல்விச் சுற்றுலாவினை புதுடில்லியில் முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.சிவநாதன் அவர்கள் குழந்தைக் கல்வி பயிற்சி நெறிக்காக இருவார நேபாள சுற்றுலாவினை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

மனித வள கல்வி காலாசார அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விளையாட்டுப்போட்டியில் ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்ச்சியில் தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்ட கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த திரு.அ.அன்ரன் அன்பழகன் அவர்கள்.

இவர்களை வாழ்த்துகின்றோம்.

மனமாற வாழ்த்தும்
ஆசிரியர் மத்திய நிலைய
முகாமையாளர்கள்,
கிளி/இராமநாதபுரம் ம.வி,
கிளி/வன்னேரிக்குளம் ம.வி.

(2633)

# நேர்நோக்கு

## குழப்புவதே குறி

பொதுசன ஐக்கிய முன்னணியினரும் அதன் தலைவி சந்திரிகா குமாரதுங்கவும் இப்பொழுது இரண்டு விடயங்கள் குறித்து முக்கியமாகப் பிரஸ்தாபித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற முறையில் சந்திரிகா குமாரதுங்க இவை குறித்து சில பணிப்புரைகளும் விடுத்திருக்கிறார். அவற்றில் ஒன்று முஸ்லிம்கள் குறித்த விவகாரம், இரண்டாவது ஈ.பி.டி.பியினர் குறித்த விவகாரம்.

'சனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டு விட்ட' ஈ.பி.டி.பியினர் குறித்தும், அவர்களது பாதுகாப்புக்குறித்தும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அக்கறை கொண்டவராகக் காணப்படுகிறார். அவர்களை வடக்கு கிழக்கில் செயற்பட அனுமதிக் குமாறு புலிகளைக் கோரவேண்டும் என்றும் அவர் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறார்.

ஈ.பி.டி.பியினர் யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் முகாம்களை அமைத்து தமக்கு சனநாயக ரீதியில் கிடைத்த சில அதிகாரங்களை இப்பொழுதும் அனுபவித்து வருவது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், நெடுந்தீவில் மக்கள் மீது பல வருடங்களாக இவர்கள் புரிந்து வந்த கொடுமைகளின் மொத்த வடிவமே இன்று அங்குள்ள மக்கள் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு உறுதியாக நடத்தும் போராட்டம் ஆகும். ஆனால், இதற்கு ஈ.பி.டி.பியினர் உட்பட்ட எவரும் எந்த வியாக்கியானத்தையும் கொடுக்கலாம்.

இது ஒரு புறம் இருக்க ஈ.பி.டி.பியினர் மீது சனாதிபதி சந்திரிகாவுக்கு ஏனிந்தக் கரிசனை? கடந்த ஆட்சிக்காலத்தில் பாராளு மன்றத்தில் மிகச்சிறிய பெரும்பான்மையுடன் இருந்த ஆட்சிக்கு அவர்கள் முண்டு கொடுத்ததிற்கான நன்றிக்கடனுக்காகவா? அல்லது சனநாயகத்தில் சந்திரிகாவின் பற்றினாலா? சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நன்றிபாராட்டும் தன்மை எத்தகையது என்பதற்கு அவரது முன்னைய நண்பர்கள்- அவரை பதவியை ஏற்றி விட்டவர்கள் இன்று எதிரிகள் ஆக மாறிவிட்டமையில் இருந்த புரிந்து கொள்ளமுடியும். அதாவது, 1994 இல் இவரைச்சுற்றி இருந்து புத்திஜீவிகள் குழாத்தில் பலர் இவரது முதலாவது ஆட்சிக் காலத்திலேயே அவமானப்படுத்தப்பட்டு விரட்டப்பட்டார்கள்.

இவர் பதவியில் அமர துணைபுரிந்த விக்ரர் ஐவன் லசந்த விக்கிரமதுங்க ஆகிய ஊடகவியலாளர்களுக்கு எதிராக சனாதிபதி என்ற முறையில் உரையாற்றும் போது பல கண்டனங்களைத் தெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினருக்கு உட்பட்ட இரண்டா வது ஆட்சிக்காலத்தில் இறுதியில் அவ்வா றானதொரு கதியே ஏற்பட்டது.

அவ்வாறே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சனநாயகப் பற்றும் பிரபல்யம் ஆனது. அவரது மெய்ப் பாதுகாவலரிலிருந்து மாமானாரும் அமைச்ச ரவைச்சகாவுமான ரத்வத்த வரை சனநாயகத் தின் அதி உச்ச வடிவமான தேர்தலின் போது வன்முறை புரிந்தார்கள் என நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தேர்தல் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச் சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட சிலரை மரபையும் மீறி அவர் பார்வையிட்டார்.

எனவே ஈ.பி.டி.பியினர் செய்த உதவிக்கு நன்றியைக்காட்டவோ அல்லது சனநா யகத்தின் மீது அவர் கொண்ட பற்றுதி யாலோ இவ்வாறு பரிவு கொண்டி ருப்பார் எனக் கூறமுடியாது. எனவே அவருக்கு சமாதான முயற்சிகளை குழப்ப கிடைத்த மற்றுமொரு துரும்பாகவே இதனைக் கொள்ளலாம். அதாவது விடுதலைப்புலிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டை முன் வைப்பதன் மூலம் அரசாங்கத்துக்கும் புலிக ளுக்கும் நெருக்கடியைக் கொடுப்பதே அவரது நோக்கமாகும்.

அது போலவே, தென்கிழக்கு தனியலகு தொடர்பாக முஸ்லிம் காங்கிரசுக்குள் எழுந்துள்ள பிணக்கை அவர் கையாள எடுக்கும் முயற்சியுமாகும். இப்பொழுது தென்கிழக்கு தனியலகு உருவாகுவதற்கு தாம் ஆதரவு எனக்கூறிக்கொள்ளும் பொது சன ஐக்கிய முன்னணியினர் தாம் பதவியில் இருந்த வேளை- முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியில் பங்களித்த வேளை அவ்வாறான தொரு அலகை உருவாக்க ஏன் முயல வில்லை?

சிங்கள தீவிரவாதிகள் கோபத்துக்கு உள்ளாகக் கூடிய இவ்விவகாரத்தில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்பது வெளிப் படை. எனவே இவ்விவகாரத்தில் அரசாங் கத்துக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக் கும் நெருக்கடியைக்கொடுப்பதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் அவரது கட்சியினரினதும் நோக்கமாகும். இவ்வாறு தான் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் பேசுவதும் முஸ்லிம் மக்களை சமாதான முயற்சிகளுக்கு எதிராக திருப்பி விடுவதை நோக்கமாக கொண்டதாகும். இன்றைய சமாதான முயற்சிகளுக்கு எவ்வாறேனும் தீங்கிழைத்துவிட சிங்கள இனவாதிகளும் இரு பிரதான எதிர்கட்சி களும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் பொதுசனஐக்கிய முன்னணிக்கு உள்ள தர்மசங்கடம் என்னவென்றால் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு என்பது போல் காட்டிக்கொண்டு அதனை எதிர்க்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகும். எனவே தான் இவ்வாறு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் சனநாயகம் என்று கூறிக்கொண்டு வன்முறை மோசடிகள் மூலம் பதவி நாற்காலிகளைக் கைப்பற்றிக் கொண்டவர்களுமான ஈ.பி.டி.பியினருக்கு எதிராக மக்கள் உறுதியாக நடத்திவரும் போராட்டத்திற்கு சனாதிபதி சந்திரிகா புதிய வியாக்கியானம் கொடுக்க முயல்கிறார். ஆனால் அவரது குறி சமாதான முயற்சி களைக் குழப்புவ்வதே.

**வேலவன்**



# மதவடி மயிலர்

செய்தி:'அரியாலை சனசமூக நிலையத்திலிருந்து இராணு வத்தினர் முற்றாக வெளி யேறினர்.'

மயிலர்:நல்லசெய்தி தான் பாருங்கோ.... ஆனால் வெளியேறிப் போகேக்கை செய்தவேலைதான் சரியில்லை.... சனசமூகநிலைய தளபாடங்களையும் புத்தகங்களையும் எல்லே அள்ளிச் சென்றிருக்கினம்..... படிக்கிற புத்தியிலை எடுத்துச் சென்றா மன்னிக்கலாம். மற்றவை படிக்கக் கூடாது என்ற திட்டத்திலை எடுத்துச்சென்றா என்ன செய்யலாம்... யாழ் நூலகத்தை எரித்த பாரம்பரியத்தைத் தொடரும் முயற்சியாக இது இருக்கக் கூடாது பாருங்கோ..... பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு ஆலோசனை. படையினருக்கு நல்ல அறிவூட்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுத்துப்போட்டு.... சனசமூக நிலையப் புத்தகங்களை திருப்பி வாங்கிக் கொடுத்தா புண்ணியம் கிடைக்கும்.

செய்தி: ஆயுதக்கப்பல் காணாமல் போன சம்பவம்- இராணுவ மேஜர் ஜெனரலுக்குத் தொடர்பு- சி.ஐ.டி விசாரணையில் தெரிவிப்பு.

மயிலர்: அப்ப இராணுவத்துக்குள்ளேயே 'மலைவிழுங்கி மகாதேவன்' கள் நிறைய இருக்கினம் எண்டு சொல்லுங்கோ: கோடிக் கணக்கிலை மோசடி செய்த கனபேர் சண்டை நிறுத்தத்தாலை சோர்ந்து போயிருக்கினம் பாருங்கோ.... ரத்வத்தை மாமாவின்ரை... என்ரையில்லை... சந்திரிகாவின்ரை மாமாவின்ரை வங்கிப்பொட்டக பதுக்கல் உலகறிந்த விடயமெல்லே... ஜெனரலே இந்த விறுத்தமெண்டால், லெப் ஜெனரல்...மேஜர் ஜெனரல் எல்லாம் சும்மா இருப்பினமே...அள்ளுறவன் ஒருதொகையெண்டா கிள்ளுறவனும் ஒரு தொகை இருப்பினம்தானே...

செய்தி: ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவுக்கு ஆயுதங்களுடன் சென்றது புலிகளுக்கு ஆபத்தை விளைவிக்கவே என்கிறார் மாவை சேனாதிராஜா.

மயிலர்: நோக்கம் அதாக இருந்தாலும், முக்கிய நோக்கம் சமாதானத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவது தான் பாருங் கோ.... ஓட ஓட விரட்டப்பட்டவையை சனங்களுக்கு தெரியாமல் பதுக்கிப் பதுக்கியெல்லே கொண்டு வந்து இறக்கி விட்டிருக்கினம் கடற்படையினர்... பத்தாததுக்கு அவைக்கு பொலிஸ் காவலுமெல்லே போட்டிருக்கினமாம்... என்னவோ கடற்படையின் போக்கே நல்லாயில்லே... சமாதானத்தை... குழப்பிறதெண்டே கங்கணம் கட்டியிருக்கினம் போல கிடக்கு....

செய்தி: ஈ.பி.டி.பி முகாம்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு சனாதிபதி உத்தரவு

மயிலா: 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' எண்ட பழமொழி சந்திரிகாவுக்கு நல்லாத்தெரியும் போலை..... இப்பதான் அவ ஆருக்குப் பாதுகாப்பாக இருக்கிறா எண்டு தெரியவருது பாருங்கோ.... தமிழ் மக்கள் அல்லல்பட்டு அலைந்த காலத்திலையெல்லாம் அக்கறை கொள்ளாத அம்மணி ஈ.பி.டி.பிக்கும் ஜே.வி.பிக்கும் ஒண்டென்றால் துடித்துப் போகிறா பாருங்கோ... தன்னுடைய கையாட்களை பாதுகாக்கிறதிலை இருக்கிற கவனம் நாட்டையோ மக்களையோ பாதுகாக்கிறதிலை இருக்கிறதாத் தெரியேல்லை....

'தனக்குத் தீனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்குமாம்' என்ன நான்சொல்லுறது சரிதானே....!

செய்தி:சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக ஜே.வி.பி லண்டனில் பிரச்சார இயக்கம்.

மயிலர்: உள்ளூரிலை உழமுடியாத மாடு அயலூரிலை உழப்போச்சுதாம்...! இங்கை சிங்கள மக்கள் மத்தியிலை தோழர்மாற்றை கூக்குரல் எடுபடேலை....இனி லண்டனிலை போய்நிண்டு கத்திப்பார்க்கப் போகினம் போலைகிடக்கு... இந்தச் சாட்டிலை ரில்வின் சில்வா லண்டன் பார்க்கப்போறார் போலை... இடதுசாரித்தோழர் என்று சொல்லித்திரியிறவையெல்லாம் இப்ப மெல்லமெல்ல வலது சாரிக் கொள்கைகளுக்கு மாறி முதலாளித்துவ நாடுகளிலை ஞானஸ்தானம் பெறமுண்டியடிக்கினம். அதோடை அங்கைதானே அவையின்ரை தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமறைவா இருக்கிறார். மக்கள் விடுதலை முன்னணி இப்ப சமாதான எதிர்ப்பு முன்னணியா மாறிட்டுது பாருங்கோ.


# துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் சகல அங்கத்துவக் கிளைகளினதும் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்.

**2002 டிசம்பர் மாதம் 15ம் திகதி**

**ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு**

துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் சகல அங்கத்துவக்கிளைகளினதும் கிளைக் குழுத் தெரிவு, பேராளர் தெரிவுக்கான பொதுச்சபைக் கூட்டம் 15.12.2002ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு பின்வரும் விபரப்படி நடைபெறும் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன். அன்றைய தினம் சகல கிளை அங்கத்தவர்களும் தவறாது தங்களின் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்படி தெரிவுகளை நடாத்த உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

| கிளையின் பெயர். | கிளை இல. | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01. துணுக்காய் நுகர்ச்சி | 01 | தலைமை நிலையம் |
| 02. கல்விளான் | 02 | கிளைநிலையம் |
| 03. யோகபுரம் மேற்கு | 03 | " |
| 04. யோகபுரம் 2,4 | 04 | " |
| 05. யோகபுரம் 1,5 | 05 | " |
| 06. புத்துவெட்டுவான் | 06 | " |
| 07. தென்னியன்குளம் | 08 | " |
| 08. யோகபுரம் 1,9 | 09 | " |
| 09. கோட்டைகட்டிய குளம் | 10 | " |
| 10. பழைய முறிகண்டி | 11 | " |
| 11. அமைதிபுரம் | 12 | " |
| 12. சிறி முருகன் | 13 | " |
| 13.அனிஞ்சியன்குளம் | 14 | " |
| 14.தேறாங்கண்டல் | 15 | " |
| 15.ஐயன்கன்குளம் | 16 | " |
| 16.அம்பலப்பெருமாள்குளம் | 17 | " |

*அ.சிங்கநாயகம்*
*தேர்தல் உத்தியோகத்தர்.*

(2412)


தங்களால் செய்யமுடியும் என்று நம்புவதால், அவர்களால் செய்ய முடிகிறது. - வெர்ஜில்



முல்லைக் கடற்பரப்பில் சுடரேற்றச் செல்லும் கடற்கலமும் கரையில் நின்று பார்வையிடும் மக்களும்



கடலில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மேடையில் ஈகச் சுடரேற்றும் கேணல் சூசை



முள்ளியவளை துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை ஏற்றிய பின்பு கேணல் துர்க்கா



தங்கள் உறவின் கல்லறைத் துயில் கலையாத தழுவலில் இந்தப் பிஞ்சுகள்

# நிகழ்வின் சில துளிகள் 2002



தேசத்திற்காய் உயிர் கொடுத்த தன் மகளின் நினைவுக்கல்லருகில் நினைவுருகி நிற்கும் தேசத்தாய்



லெப். சீலன் [சாள்ஸ் அன்ரனி] அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணியும் சீலனின் தாயார்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.